
"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM



கீரிமலை
நகுலேச்சரம்
கோபுர
கும்பாபிஷேகம்
01.07.2018

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


பெருமையுடன்
21ஆவது
வருடத்தில்
RUBY'S
CATERING
020 8799 7180
www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk
உன்னத உணவு
வைபவ மண்டபம்
மகோன்னத உபசரிப்பு
திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா
ACCREDITED SRILANKAN CATERERS @
Hilton
Holiday Inn
உட்பட பிரபல ஹோட்டல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......
Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 26

# கலசம்
# KALASAM

ஒலி 90

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்

**விளம்பரம்**
**தொடர்புகள்**
மா இந்துசேகரன்

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச்
சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

## பஞ்சபுராணம் பாடலாமா?

கோயில்களில் வழிபாடுகள் பூசைகள் நடக்கும்போது இறைவனுக்குச் செய்யும் உபசாரங்களில் திருமுறை ஓதுதலும் ஒரு முக்கியமான அங்கம் வகிக்கிறது. குறிப்பாக, திருவிழாக் காலங்களில் சுவாமி வலம்வரும் பொழுதும், யாகசாலைப் பூசையிலும் மிகமுக்கியமாக நடைபெறவேண்டிய உபசாரம் இது. இதன்போது பஞ்சபுராணம் என்று குறிப்பிடப்படும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய திருப்பாடல்களையே ஓதுவது மரபு.

இங்கிலாந்தில், **லூயிஷாம் சிவன்கோயிலில் மட்டும் ஓதுவார் மூர்த்தியை இதற்கென ஏற்பாடு செய்துள்ளார்கள்.** ஏனைய கோயில்களில் இப்படிப் பஞ்சபுராணம் பாடுவதற்கு ஒரு போட்டியே நிகழ்வதைப் பார்க்கலாம். பல வயதினரும் பாடவென முன்வருவார்கள். இதிலே வேதனை தரும் விடயம் என்னவென்றால், **பலருக்குத் தேவாரம், புராணம் முதலியன என்னவென்றே தெரியாமல் இருப்பது**தான். ஐந்துகரத்தனை, மூவிரு முகங்கள் போற்றி என்பவற்றை இவர்கள் பாடுவது இதற்குச் சில உதாரணங்கள்.

மற்றவர்கள் தேவாரம் ஓதுவதைக் கேட்பதும் மட்டற்ற மகிழ்ச்சி தரும் என்பது இவர்களில் பலருக்குத் தெரியாது. அரவத்தை அரையிலே அணிந்திருக்கும் இறைவனின் திருப்பாடல்களைக் கேட்கும்போது ஏற்படும் மகிழ்ச்சியானது **நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ் வீற்றிருந்த செல்வங்கூட விளைவிக்காது** என்று ஐயடிகள் காடவர்கோன் கூறுவதை இவர்கள் அறியார்கள்.

பஞ்சபுராணம் தவறின்றி ஓதப்படவேண்டிய ஓர் உபசாரம். அதை ஓதுவதற்கும் சில தகுதிகள் வேண்டும். அ்.து அற்றவர்கள் ஓதுவது முறையாகாது. இசை ஞானம் இல்லாவிட்டாலும் சொற்பிழையின்றி, உச்சரிப்புச் சுத்தமாகப் பாடுவதே முறை. ஒவ்வொரு கோயிலும் இதற்கென ஒருவரை அல்லது சிலரை நியமித்து, பயிற்சி கொடுத்து ஓதவைத்தலே நல்லது. பயிற்சி பெறாத மருத்துவர் அல்லது பொறியியலாளர் அல்லது சட்ட வல்லுனரிடம் நாம் ஆலோசனை பெறப் போவோமா? இல்லையே! அதுபோலத்தான் திருமுறை ஓதுவதற்கும் பயிற்சி முக்கியமாகின்றது. இதைக் கோயில் நிருவாகிகள், தருமகர்த்தாக்கள் கவனத்திற் கொள்ளல்வேண்டும். கொள்வார்களா?

**க ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| அண்ணாமலை அண்ணல் | 03 |
| கும்பாபிஷேகம் - அறிவித்தல் | 06 |
| மைந்தரின் கடமை - கந்தபுராணச் சிந்தனைகள் | 07 |
| திருவாசக அரண்மனை | 10 |
| ஆவுடையார் கோயில் (எ) திருப்பெருந்துறை | 13 |
| கதிர்காமத்தில் புத்தாண்டு | 15 |
| திருநாவுக்கரசர் திருவாழ்வில் வியத்தகு அருட்செயல்கள் | 18 |
| ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலய கர்ப்ப நியாஸம் | 31 |
| கண்ணனும் தாத்தாவும் | 33 |
| ஐயம் தெளிவோம் | 37 |
| எம் எல் வி ஒரு சகாப்தம் | 40 |
| Hinduism in search of Answers | 44 |
| Thirukural Stories | 47 |


**அட்டைப்படம்: ராம்**

# அண்ணாமலை அண்ணல்

## வித்துவான் க வேந்தனார்

ஈசனின் இன்னருள் எல்லாப் பொருள்களிலும் கலந்து நிழலாடும் இயல்பு வாய்ந்தது. இயற்கை எழிலில் ஈசனின் அருளைக் கண்டு மகிழலாம். என்றும் ஈசனையே எண்ணி, எங்கும் அவனையே காண்கின்ற மெய்யடியார்கள் இயற்கையில் ஈசனைக் கண்டு இதயம் நெகிழ்வார்கள். மரமும், செடியும், புள்ளும், விலங்கும், பிற பல உயிர்களும் ஆற்றும் செயல்களில் எல்லாம் ஈசனின் அருளைக் கண்டுகளிப்பார்கள். உலகில் உள்ள இயங்குதிணை உயிர்களிலும், நிலத்திணை உயிர்களிலும் உடனாய்க் கலந்து நின்று வழிகாட்டும் இறைவனை உணரும் தவத்திரு மிக மிக மேலானது. உயிர்க்குயிராய் ஒன்று பட்டு நின்று உள்ளொளியைப் பெருக்கி, உவப்பிலா ஆனந்தத்தை அளிக்கும் ஆண்டவனை உலகிலேயே கண்டு உய்ய வேண்டும். உலகெலாம் ஆகி வேறாய் உடனு மாய் நிற்கும் அம் முழுமுதலை, உலகுயிர் வாழ்விலே கண்டு உய்வடைந்த மெய் யடியார்களின் அடிச்சுவட்டை உணரவேண்டும். உணர்ந்து உள்ளம் தெளியவேண்டும். இறைவ னின் அருள் எங்குமாய்ப் பரவி அலை எறிகின்றது. அந்த அருள்வெள்ளத்தில் தோய்ந்து தூய்மையடைந்த செம்புலச் செல்வர்கள் அவனை எங்கும் காண்பார்கள். அவர்கள் காண்பதும் அருள், கேட்பதும் அருள். உண்பதும் அருள், உயிர்ப்பதும் அருள், உறுவதும் அருள். "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உறுவ"தாகிய ஐந்து புலன்களின் ஈடுபாடும் ஒரு பொருளிலே சென்று நிறைந்துவிடும். ஐந்து பேருணர்வும் ஒன்றிலே சென்று படிதல்தான் ஒன்றுபட்ட பேரின்ப நிலையாகும். இந்நிலையை:

**ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள**
**அளப்பருங் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்**
**திருந்துசாத் துவிக மேயாக**
**இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த**
**எல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்**

எனச் சேக்கிழார் பெருமான் எடுத்துக் காட்டுகின்றார். உலகுயிர்களின் செயலெல்லாம் ஈசன் இயற்றுகின்ற எல்லையில் தனிப்பெருங் கூத்தின் செயலென்பதைத் தெளியவேண்டும். தெளிந்தால், வழிப்பட்டு நின்று சிவம் பெருக்க வேண்டும். திருஞானசம்பந்தப் பெருமான், தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் திருநிறைந்தவர். **"தவம் பெருக்கும் சண்பை யிலே தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்"** என்பது பெரியபுராணம்.

சிவம் பெருக்கும் பிள்ளையார்; சிவம் பெருக்கும் திருஞானசம்பந்தர் திருவண் ணாமலையை அடைந்தார். அண்ணாமலை நாதரின் அடிக்கமலங்களைத் தொழுதார். விண்ணோர் தொழும் அண்ணாமலை நாதன், எல்லா உயிர்க்கும் புகலாய், உண்ணாமுலை உமையாளோடு எழுந்தருளியிருக்கும் திருக் கோலத்தைத் தொழுது பேருவகை கொண்டார்.

ஆரா வேட்கையுடன் அண்ணாமலைச் சாரலை நோக்கினார். அண்ணாமலைச் சாரலில் வதியும் அனைத்துயிர்களும் அண்ணாமலை நாதனின் அருட்கோலமாக விளங்குவதைக் கண்டார்.

விண்ணை முட்டும் அண்ணாமலைச் சாரலின் மருங்கே தேமா மரங்கள் நின்றன. அவற்றில் கனிகளும் காய்களும் பூக்களுமாய்ப் பொலிந்தன. கடுவன் ஒன்று தேமாங்கனியைப் பறிக்க முயன்றதினால் உண்டான அற்புத நிகழ்ச்சியொன்றை அருள் வள்ளலாகிய சம்பந்தர் கண்டார். கண்டதும் உள்ளம் செழித்தார். அண்ணாமலையானின் அடிக் கமலங்களைப் பாடும் வாயால், அங்கு வதியும்

ஆண்குரங்கின் ஆண்மைச் செயலைப் பாடுகின்றார்.

### தேமாங்கனி கடுவன் கொள விடுகொம்பொடு தீண்டி

இனிய தேமாங்கனி மலையளவு உயர்ந்த மாங்கொப்பில் தொங்குகின்றது. ஏறிப்பிடுங்க எண்ணினால் உள்ளம் நடுங்கும். கனியின் சுவையை எண்ண எண்ணக் கடுவனின் உள்ளம் இனிக்கின்றது. எந்த வகையிலும் அந்தத் தேமாங்கனியைப் பறித்து உண்ணவேண்டும் என்ற எண்ணம் கடுவனின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. அச்சம் அகன்றது. ஆண்மை பிறந்தது. தேமாவின் உச்சிக் கிளையில் ஒரே தாவலாகப் பாய்ந்த கடுவன், கனிகள் தூங்கும் கொப்பைக் கையாற் பற்றியது. பற்றிய கொப்பைப் பாடுபட்டு வளைத்தது. கொப்பு மிகப் பெரியது. இழுத்து வளைத்த கடுவனையும் எடுத்தெறியக்கூடிய விசை உடையது. ஆண்மை மிக்க கடுவன் கொப்பின் ஆற்றலை அடக்கி இழுத்து அதன்கண்ணுள்ள இனிய கனிகளைப் பறித்தது. கடுவன் அரும் பாடுபட்டுத் தேமாங்கனியைப் பறித்த செயல், இளமைப் பருவத்தில் ஈசனுக்கு ஆளான ஆளுடைய பிள்ளையாரின் அருள் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. தம் உள்ளத்தைக் கவர்ந்து ஆண்டுகொண்ட ஈசனை, **என் உள்ளங்கவர் கள்வன்** எனப்பாடிய அவரின் உள்ளத்தை, அண்ணாமலைச் சாரலில் வாழ்ந்த கடுவனின் செயலுங் கவர்ந்துவிட்டது.

### தேமாங்கனி கடுவன்கொள

தேமாங்கனியைக் கடுவன் கொண்ட செயலை அவரால் மறக்கவே முடியவில்லை. இளமைப் பருவக் கடுவன் என்றபடியால்தான், இவ்வளவு முயன்று தேமாங்கனியைப் பறித்தது. முதுமைப் பருவக் கடுவன் என்றால் முயல முடியாது. இளமை மாறுமுன்னரே நாம் ஈசன் அடிக்கு ஆளாகவேண்டும். ஆளானால் இளமை எழுச்சியுடன் அவனைப் பாடலாம், ஆடலாம், கூடலாம், ஊடலாம், தெருவுதோறும் அவனைத் தேடி அலறலாம், ஆனந்தக் கூத்தாடலாம் என்ற உண்மைகளை எல்லாம் கடுவனின் செயலில் வைத்துச் சம்பந்தர் எமக்குக் கூறாமற் கூறுகின்றார்; குறிப்பாகக் காட்டுகின்றார். இளமைப்பருவக் கடுவன் முயன்று முயன்று, அடைதற்கரிய தேமாங்கனியைப் பறித்துச் சுவைத்தாற்போல, நாமும் இளமை கழியு முன்னரே ஈசனுக்குத் தொண்டு பூண்டு, பேரின்ப நுகர்ச்சி எய்தவேண்டும் என்பதாம்.

தேமாங்கொப்பின் உயரம், உலகவாழ்வில் ஊறி, ஈசன் அருளை மறந்தோர்க்கு, பேரின்பம் மிகச் சேய்மையில் உள்ளதென்பதையும், தேமாங்கொப்பைப் பற்றி வளைக்க வளைக்க அது வளைக்கின்ற கடுவனைத் தூக்கி எறியத்தக்க விசையுடையதாய் இருத்தல், ஈசன் அருளை அடைதற்கு முயல்கின்றவரை உலகப் பற்றுக்கள் தாக்கித் தம்பக்கம் இழுக்க முயல்வதையும், அந்த மாங்கொப்பின் ஆற்றலை அடக்கி வளைத்த கடுவன், மாங் கனியைப் பறித்து நுகர்தல், உலகப் பற்றினால் உண்டாகும் தாக்கங்களை வென்று, இறைவன் திருவடிக்காளாகிப் பேரின்ப நுகர்ச்சி பெறும் ஆருயின் ஆற்றலையும் குறிப்பாக உணர்த்தி நிற்றல் காண்க.

### விடுகொம்பொடு தூமாமழை தீண்டி

கடுவன் கனியைப் பறித்துக்கொண்டு விட்ட தேமாவின் கொப்பு, கருக்கொண்ட மழை முகிலுடன் மோதியது. கருங்கற் பாறையின்மேல் வீழ்ந்த மழைத்துளிகள் வெள்ளமாகப் பாய்கின்றன. கடுவன் ஆற்றிய செயலால் தேமாங்கொப்பும் வேறோர் செயலை ஆற்றியது. கடுவனுக்குப் பெருந்தொல்லை கொடுத்த மாங்கொப்பு, கடுவனால் வளைக்கப்பட்டு விசை அடங்கியது. விசை அடங்கிய அக்கொப்பைக் கடுவன் விட்டது. அக்கொப்பு, கருக்கொண்ட மழை முகிலுடன் மோதி மழை பொழியச் செய்தது. காலந் தாழ்த்தாமல் விரைந்து மழையைப் பொழிந்து, வையத்தை வாழ்விக்க வேண்டும். காலந் தாழ்த்தினால் வையம் வருந்துமென்று, மழை முகிலைத் தாக்கி மாங்கொப்பு வழி காட்டுகின்றது. ஒவ்வொருவரும் தாம்

ஆற்றவேண்டிய கடமைகளைக் காலந்தவறாது ஆற்றவேண்டும். காலம் கழிந்தால், கருதிய பொருளைப் பெற இயலாது என்னும் உண்மையை, மழை முகிலை மோதி மோதி மழை பொழியச் செய்த மாங்கொப்பின் செயல் உணர்த்துகின்றது. காலத்தோடு கற்பனை கடந்த ஈசனை, நாம் காலத்தொடு தொழுது அன்பு செய்யவேண்டும்.

**"நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும்"**

என்பது திருக்குறள்.

இறைவனுக்கு ஆளாகி அன்புசெய்யும் நல்ல வினையை, நாளைப்போக்காமல் நாம் விரைந்து புரியவேண்டும் என்பதை நினைந்து ஈடேறுவோம். கடுவனால் வளைக்கப்பட்ட மாங்கொப்பு மெய்யடியாரின் அருள் நோக்கம் பெற்றோர் தம் புன்மை நீங்கி உய்ந்து பிறருக்கும் உய்ய வழிகாட்டுவதுபோல, தானும் சிறந்து, காலத்தோடு மழையைப் பொழிந்து வையத்தை வாழ்விப்பாயாக என மழை முகிலுக்கும் வழிகாட்டியதென்க.

## ஆமாம்பிணை அணையும் பொழில்

மாங்கொப்பினால் தாக்குண்ட மழைமுகில் மலைப்பாறையின்மேல் மழையைப் பொழிந்தது. மழை நீர் பாறையில் நில்லாமல் வழிந்து சென்றது. மழை பெய்யும் அறிகுறியொன்றும் இல்லாமையால், அச்சம் சிறிதுமின்றிப் புல்மேய்ந்து, மகிழ்ந்த காட்டுப் பெண்மான்கள், எண்ணாத வகையில் மழை பெய்வதைக்கண்டு ஏங்கிவிட்டன. மழைக்கு நனையாமல் ஒதுங்கி நிற்க இடமின்றி இன்னலுற்றன. காட்டில் வாழும் பெண்மான்கள், மழைக்காலத்தில் தாம் நனையாமல் வதிதற்குப் பாதுகாப்பொன்றும் தேடாமல் வாழ்பவை. மழைக்கோலத்தைக் கண்டவுடன் ஒதுக்கிடந்தேடி ஓடும் இயல் புடையவை. எண்ணாத வகையில் செயற் கையால் மழை முகில் உடைந்து மழையைப் பொழியக் கண்டவுடன், மருண்டு மனங் கலங்கி மலைச்சோலையை நோக்கி ஓடின. இக் காட்டுமான்கள்போல, வருமுன்னர்க் காவாத வாழ்வில் இருந்து வாழும் மக்களும் பலர், இளமை கழிந்து முதுமை மிகுந்து, இறந்துபடும் எல்லை எய்தும்வரையும், இறைவனை எண்ணாமல் உலகவாழ்விலேயே மனத்தைப் பதித்து வாழ்கின்றார்கள். உடல் வலுக் குன்றித் தம்செயல் அற்றநேரத்தில் இறைவனை எண்ணித் தொழுகின்றார்கள். இளமை கழியமுன்னர் இறைவனுக்குத் தொண்டுபூண்டு, பெற்ற சிற்றின்பத்தில் பேரின்பச் சாயலைக் கண்டு வாழாமல் வறிதே காலத்தைக் கழித்த தம் அறியாமையை எண்ணி அழுவார்கள்.

**காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே**
**பாலுண் கடைவாய் படுமுன்னே - மேல்விழுந்தே**
**உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே**
**குற்றாலத் தானையே கூறு**

என்ற உண்மையை உளங்கொள்ளத் தவறி விட்டவர்கள் பிறவிப்பயனை அடைதல் அரிது. பெண்மான்கள் எண்ணாத வகையில் எதிர்பாராமல் வந்த மழைக்கு அஞ்சி அண்ணாமலைச் சோலையில் அடைக்கலம் புகுந்தன. நாமும் அம் மான்களைப்போல, அல்லல் வருந்துணையும் ஆண்டவனை எண்ணாமல் இப்பொழுதே அவனுக்கு ஆளாகுவோம். அண்ணாமலை நாதனின் அடிக்கமலத்தைத் தொழுவோம். விண்ணோரும் வந்து தொழும் அண்ணாமலையானை அல்லும் பகலும் அயரா அன்புடன் தொழுதால் தொல்லை இரும்பிறவி ஒழியும். அல்லல் அற்ற ஆனந்தவீட்டின்பம் கூடும். அஞ்சி நடுங்கிய மான்களுக்கு அண்ணாமலையான் பொழில் அடைக்கலம் அளித்ததுபோல, நாமும் பிறப்பிறப்புப் பிணிக்கஞ்சி அண்ணா மலையானைத் தொழதால், அவனடியார்கள் எமக்கு ஆதரவு தந்து வழிகாட்டி வாழ்விப்பார்கள்.

## பூமாங்கழல் புனைசேவடி

அண்ணாமலையானின் அடிக்கமலம் பிறவிப் பிணியைப்போக்கும் புணை. அத்திருவடிகளில் அடியார்கள் தூவி வணங்கிய மலர்கள் என்றும் உள்ளன. பூமாண் அடி, அத்துடன் அத்திருவடிகளும் திருவருளாகிய தேனைச் சொரிகின்ற செந்தாமரை மலர்கள்.

தொண்டர்களாகிய திருக்கோத்தும்பிகள் அந்த அண்ணாமலையான் அடிமலர்களில் என்றும் சுரந்து ஊறுகின்ற பேரின்பத் தேனை நுகர்ந்தவண்ணமாய் உள்ளன. சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன அத்திருவடிகள். அடைந்தவரின் பிறவிப் பிணியை நீக்குகின்ற மாண்புடையன.

**"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்"**

என்பது திருக்குறள். அச்சேவடியில் வீரக்கழல் புனையப்பட்டுள்ளது. தம்மையே புகல் என அடைந்த ஆருயிர்களின் இருவினைகளைப் போக்கிப் பேராஇயற்கைப் பேரின்ப வீட்டை நல்கும் பேரருள் ஆண்மையாளன் என்பதை வீரக்கழல்கள் உணர்த்துகின்றன.

### சேவடி நினைவார் வினையிலர்

அண்ணாமலையானின் பூமாங்கழல் புனை சேவடியை நினையுங்கள். நினைந்து நினைந்து நெஞ்சுருகுங்கள். அவனின் சேவடிகளை இடைவிடாது நினையுங்கள். இறைவன் அடிசேர்ந்தார் பிறவிப் பெரும் பிணியை நீங்குவார். அத்திருவடி சேவடி, சிவந்த திருவடிகள். சிறப்பென்னும் வீட்டைத் தருகின்ற சேவடிகள். அச் சேவடியைச் சேர சேவடி படரும் செம்மல் உள்ளம் வேண்டும். இறைவன் சேவடிகளையே சிந்திக்கின்ற உள்ளம் செம்மல் உள்ளம். தலைமை கொண்ட உள்ளம். அச் சேவடிகள் சிந்திப்பரியன, சிந்தித்தால் சிந்திப் பவர் உள்ளத்தில் தேனாய் இனிப்பன. என்றும் அண்ணாமலையான் அடிக் கமலங்களாகிய சேவடிகளையே சிந்தியுங்கள்; சிந்தித்துச் சிந்தித்துச் செம்மலர் நோன்தாள் சேர ஒட்டா அம்மலங் கழுவுங்கள்; அன்பரொடு மருவுங்கள். இருவினைப் பற்றும் ஒழிந்து இன்பவீட்டை எய்தலாம்.

**தேமாங்கனி கடுவன் கொள**
**விடுகொம்பொடு தீண்டித்**
**தூமாமழை துறுகன் மிசை**
**சிறுநுண்துளி சிதற**
**ஆமாம் பிணை அணையும் பொழில்**
**அண்ணாமலை அண்ணல்**
**பூமாங்கழல் புனைசேவடி**
**நினைவார் வினை இலரே**

கடுவன் - ஆண்குரங்கு
விடுகொம்பு - வளைந்து மாங்கனியைப் பறித்தபின் விட்ட கொம்பு
தூமாமழை - தூய்மையான கரிய மழைமுகில்
துறுகல் - பாறை
ஆமாம் பிணை - காட்டு மான்
பூமாங்கழல் புனை - பூவும் கழலும் புனைந்த பெருமைபொருந்திய
சேவடி - சிவந்த திருவடிகள்

## ஸ்ரீசிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயம்

# மஹாகும்பாபிஷேகம்

**சைவ முன்னேற்றச்சங்கம் கடந்த 10 ஆண்டுகளாக ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமானைப் பிரதிஷ்டை செய்து வழிபாடுகளை நடத்தி வந்தது.** 2, Salisbury Road, Manor Park, London E12 6AB **என்ற விலாசத்தில் அமைந்த இக் கோயில் தற்போது சிவலிங்கம் முதலான ஏனைய திருமூர்த்தங்களுடன் விரிவாக்கப்பட்டு ஓர் அழகிய திருக்கோயிலாக வடிவெடுத்துள்ளது.**

**இந்தக் கோயிலுக்கு, 2018 நவம்பர் மாதம் 14ஆம் திகதி, விளம்பி வருஷம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் புதன்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.**

**திருப்பணியிலும் நடக்கவிருக்கும் குடமுழுக்கிலும் சைவ அடியார்கள் கலந்து தமது பங்களிப்பைச் செய்து ஆடவல்லானின் திருவருளைப் பெற்றுய்யவேண்டும் என்று சைவ முன்னேற்றச்சங்கச் செயற்குழு தங்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றது.**

# மைந்தரின் கடமை

## கந்தபுராணச் சிந்தனைகள்

கலாநிதி சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

**மகன்தந்தைக் காற்றும் நன்றி இவன்தந்தை**
**எந்நோற்றான் கொல்எனும் சொல்**

ஒரு மகன் தன்னுடை தந்தையாருக்குச் செய்யும் நன்றிக்கடன் என்னவென்றால் இவனுடைய தந்தை இவனைப் பெற என்ன தவம் செய்தானோ என்று எல்லோரும் சிலாகிக்கும்படி நடத்தல் என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். இதை எவ்வாறு செய்வது? அதற்குரிய சைவத் தமிழ்க் கலாசார முறை என்ன? இதைக் கந்தபுராணம் சொல்கிறது. சில சம்பவங்களைப் பார்ப்போம்.

***சம்பவம் 1:***

சூரனுடைய ஏவுதலால் அசுரப்படைகள் இந்திரபுரியைத் தாக்கி இந்திரனையும் இந்திராணி யையும் சிறைப்பிடிக்கச் செல்கின்றனர். மகன் சயந்தன் அந்த நேரத்திலே திருமாலோடு வைகுண்டத்திலே தங்கிவிடுகின்றான். இந்திரனும் இந்திராணியும் ஒளித்தோடிப் பூவுலகத்திற்கு வந்துவிட்டனர். தேவலோகம் பெரும் அழிவுக்குள்ளாகிறது. சயந்தன் நடந்தவற்றைக் கேள்விப்படுகிறான். தந்தை தளர்ச்சியடைந்தால், தம்குடியில் உள்ள தலைமை முழுவதையும் ஏற்றுக்கொள்ளுதல் மைந்தர்களின் வழக்கமாகும். அதுவே அறமுமாகும். என் தந்தை தேவ லோகத்தில் இல்லை. ஆகையால் நான் சென்று அமராவதி நகரத்தைக் காப்பேன் என்று நினைத்துச் சயந்தன் தேவலோகம் வருகின்றான்.

**தந்தைதன் மெலிவு காணில் தங்குடித் தலைமை யெல்லாம்**
**மைந்தர்கள் பரித்துக் கோடல் வழக்கதாம் அறனும் அ∴தே**
**எந்தையுமில்லை யான்போய் என்னகர் காப்ப னென்னாப்**
**புந்தியி லுன்னி மைந்தன் பொன்னகர் தன்னில் வந்தான்**

***-இந்திரன் கரந்துறை படலம் 28***

இச் சம்பவவத்திலே தந்தை தளர்ந்த சமயத்திலே தம் குடிப்பெருமையைத் தாங்குதல் மைந்தருடைய கடமையென்று கந்தபுராணம் சொல்கின்றது.

***சம்பவம் 2:***

தம்பியாகிய தாரகன் முருகப் பெருமானாலும், மகன் வச்சிரவாகு, தூதனாக வந்த வீரவாகு தேவராலும் அழிக்கப்பட்ட பின்னர் முருகப்பெருமான் போருக்கு வந்திருப்பதை ஒற்றர்கள் சூரபத்மனிடம் சென்று சொன்னார்கள். சூரபத்மனுக்கு மகன் பானுகோபனிடம் அளவு கடந்த நம்பிக்கை. 'மாலை சூடிய, வேலைத் தாங்கிய முருகப்பெருமானின் ஆற்றலையும், மற்றவர் ஆற்றலையும், போர்செய்துவிட்டுச் சென்ற தூதனான வீரவாகுத்தேவரின் ஆற்றலையும் நான் அழிப்பேன். நீங்கள் போய் என் மகன் பானுகோபனை அழைத்து வாருங்கள்' என்று சூரன் அவ்வொற்றர்களிடம் சொன்னான். ஒற்றர்கள் விரைந்துபோய்ப் பானுகோபனை அழைத்து

வந்தார்கள். பானுகோபன் சூரனை வணங்கி, அழைத்த காரணம் என்னவெனக் கேட்கிறான். 'மேகக் கொடியை உயர்த்திய இந்திரன் வேண்டிக்கொள்ள, சிவபெருமான் தான் பெற்றெடுத்த முருகனை நம்முடன் போர் செய்ய அனுப்பியுள்ளான். ஆதலால் நானும், என் மகனே! உன்னைக் கொண்டு வெற்றிபெற எண்ணுகின்றேன்' என்று சூரபத்மன் சொல்லுகிறான்.

**அந்தண் மாமுகில் உயர்த்தவன் வேண்டலும் அமலன்**
**தந்த கந்தனைச் சாரதத் தலைவர்க ளோடு**
**நந்தமைப் பொர விடுத்தனன் ஆதலின் நானும்**
**மைந்த நின்கொடு வெற்றிபெற் றிருந்திடல் வழக்கே**

***-முதனாட் பானுகோபன் யுத்தப் படலம் - 10***

இச் சம்பவத்திலே தந்தைக்கு எதிர்ப்பு வரும் வேளையிலே மகன் அந்த எதிர்ப்பைத் தடுத்து நிறுத்துவது அவனுடைய கடமையாகக் காணப்படுகிறது.

**சம்பவம் 3:**

முதல் நாள் யுத்தத்திலே பானுகோபன் தோற்று வீடு வந்து சேர்ந்தான். இரண்டாம் நாள் யுத்தத்திலே சூரபத்மனும் நேரில் சென்று தோற்றோடி வந்தான். இந்த நிலையில் மூன்றாம் நாள் பானுகோபன் யுத்தத்திற்குச் செல்கிறான். கடும் யுத்தம் நடைபெறுகிறது. சூரனின் தாயாரான மாயை கொடுத்த அஸ்திரத்தினால் வீரவாகுத்தேவர் உட்பட அனைவரையும் கட்டிக் கடலில் தள்ளினான். பிறகு சூரபத்மனிடம் தன் வெற்றியைச் சொன்னான். சொன்னதும் சூரன் பெரிதும் மகிழ்ச்சியடைந்தான். அவனுடைய உடல் விம்ம, அணிந்திருந்த ஆபரணங்கள் உடைந்து வீழ்ந்தன. விரைவாக மார்பில் இறுக்கமாகத் தழுவிக் கொண்டான். குழந்தைப் பருவத்தில் வைத்துக் கொண்டிருந்தாற்போலத் தன் பக்கத்தில் இருத்திக் கொண்டான். 'தந்தையர்கள் இனிமையாக வீற்றிருப்பதே தம் மைந்தர் தம் குடும்பங்களைத் தாங்கியபின் அன்றோ? என் மகனே! நீ தோன்றி எம் குடியைப் பழைமையான முறைப்படி காத்தலால் நானும் என் உள்ளத்தில் ஒரு கவலை தரும் எண்ணமும் இல்லாது சிறப்படைந்தேன்'.

**தந்தை யாயினோர் இனிதுவீற் றிருப்பதும் தமது**
**மைந்தர் தம்குடி பரித்தபின் அன்றிமற் றுண்டோ**
**எந்தை வந்துநந் தொன்முறை போற்றலால் யானுஞ்**
**சிந்தை தன்னிலோர் எண்ணமும் இன்றியே சிறந்தேன்.**

**-மூன்றாம் நாட்பானுகேபன் யுத்தப் படலம் 174**

இச் சம்பவத்திலே தந்தையார் இனிது வீற்றிருப்பது தம் மைந்தர் தம் குடும்பத்தைத் தாங்கிய பின்னரே எனக் காணப்படுகிறது.

**சம்பவம் 4:**

யுத்த களத்திலே சூரனின் மகனான இரணியன் வீரவாகுத்தேவருடன் போர் செய்கின்றான். கடும்போர் நடைபெறுகிறது. இரணியன் வீரவாகுத்தேவரினால் கடுமையாகத் தாக்கப்படுகின்றான். தான் அழிவது மட்டுமல்ல, தந்தையும் அழியப்போவதை உணர்கிறான். தான் உயிர் தப்ப ஒளிந்து ஓடலாம், அல்லது புகழோடு வீரமரணம் எய்தலாம். எதைச் செய்வது என்று சிந்திக்கிறான். மைந்தனைப் பெறுவதும், குற்றமில்லாத அறிவுடனும், அன்புடனும் வளர்ப்பதும் தந்தை இறந்தவுடன் அவரது குலத்திற்கேற்ப அழிவற்றி ஈமக்கடன்களைச் செய்யவதற்காகவேயாகும். ஆதலால் நான் உயிருடனிருந்து அக்கடனைச் செய்வேனெனத் தீர்மானிக்கின்றான்.

மைந்த னைப்பெறு கின்றது மாசிலாப்
புந்தி அன்பொடு போற்றி வளர்ப்பதும்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
அந்த மில்கடன் ஆற்றுதற் கேயன்றோ

- *இரணியன் யுத்தப்படலம் 126*

இச் சம்பவத்திலே பெற்றோருக்கு இறுதிக்கடன் செய்வது மைந்தரின் தலையாய கடன் எனக் காணப்படுகின்றது.

**சம்பவம் 5:**

சூரபத்மன் முருகப்பெருமானின் வேலினால் மயிலாகவும், வேலாகவும் மாற்றப்பட்டு, யுத்தம் முடிவடைகிறது. இரணியன் சூரனின் இறுதிக்கடன் செய்யவென்று காவலிருந்தவன் வருகிறான். இறுதிக் கடன் செய்வதற்கும் வழியில்லாத நிலை. 'தந்தையே! கெடாத பழைய வடிவத்தை இழந்து பறவையின் வடிவமானாய். அதனால், நீ இறந்துவிட்டாய் என்று ஒரு தந்தைக்கு மகன் செய்யக்கூடிய ஈமக்கடனைச் செய்வதற்கும் யான் புண்ணியஞ் செய்யவில்லை. இந்த உயிரை வீணாகச் சுமந்து நிற்கிறேன்' என்று அவன் நினைக்கின்றான்.

மாறுற் றிடாத்தொல் வடிவந் தனைஇழந்து
வேறுற்ற புள்வடிவாய் மேவினாய் ஆங்கதனால்
ஈறுற் றனைஅன்றே என்செய்கை செய்வதற்கும்
பேறுற் றிலன்வாளாப் பேணினேன் இவ்வுயிரே

*-இரணியன் புலம்பறுபடலம் 16*

இச் சம்பவத்திலே, தன் கடமையைச் செய்யப் பேரன்போடு காத்திருந்து, அக்கடமையைச் செய்ய முடியாதுபோன அங்கலாய்ப்புக் காணப்படுகின்றது.

இந்த ஐந்து சம்பவங்களையும் பார்க்கும்போது "இவன் தந்தை எந்நோற்றன் கொல் எனும் சொல்" சைவத் தமிழ்க் கலாசாரத்திற்கு அமைய எவ்வாறு மைந்தரால் பெறப்படுகின்றது என்பது புலப்படுகின்றது.

## காசி விஸ்வநாதர் கோயில்

*1699*இல் ரம்ஜான் மாதத்தில் ஔரங்கசீப் விஸ்வநாதர் கோயிலை இடித்து (இடிந்த பாதிக்கோயில் இன்னும் வெளியே தெரிகிறபடி) அதன் மீதும் அதற்குப் பக்கத்திலும் ஞானவாபி மசூதியைக் கட்டினான்.
விஸ்வநாதர் கோயில், பல நாட்டு மக்கள் இலட்சக் கணக்கில் வந்துபோனாலும், ஒளியிழந்தே இருந்தது. 2014இல் மத்திய மாநில அரசுகளின் முயற்சியால் சுத்தமாக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு (2018) சுப்புசுந்தரம் செட்டியார், அன்னபூரணி ஆச்சி தம்பதியரின் திருத்தொண்டால் கும்பாபிஷேகம் நடத்தப்பெற்றுப் பொலிவடைந்துள்ளது.
"உன் மனம் சுத்தமாக இருந்தால் இறையருள் உன்னைத் தேடி வரும்" என்று கூறினார் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர். அப்படி இறையருள் சுப்புசுந்தரம் - அன்னபூரணி தம்பதியரைத் தேடி வந்ததால் 238 ஆண்டுகளின் பின் காசி விஸ்வநார் கோயில் கும்பாபிஷேகம் நடந்தேறியுள்ளது.

நன்றி - துக்களக்

தகவல்: முனைவர் சாரதா நம்பியாரூரன்

# திருவாசக அரண்மனை

செந்தமிழ்ச் சொல்லருவி ச லலீசன்
சிரேஷ்ட விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியகலாசாலை



திருமூலரால் சிவபூமி என்று சிறப்பிக்கப்பட்ட ஈழமணித் திருநாட்டில் இன்று திருவாசகத்துக்கென ஓர் அரண்மனை கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

யாழ்மண் திருவாசகத்தை உயிர்ப்புடன் பேணும் மண்ணென்றால் மிகைப்படாது. மார்கழியில் திருமுறைக் காப்பிட்டுத் திருவாசகப் பாக்களை ஓதும் வழக்கமாயினும் சரி, நீத்தார் சடங்குகளில் திருப்பொற்சுண்ணத்தைப் படிக்கும் மரபாயினும் சரி, ஆலயங்களில் மடங்களில் திருவாசக முற்றோதலை மேற்கொள்வதானாலும் சரி திருவாசகத்துக்கு முதன்மை வழங்கும் நடைமுறை இன்றும் தொடர்ச்சியுற்றுள்ளது. இந்நிலையில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அமைத்த திருவாசக அரண்மனை "திருவாசகம் என்றால் யாழ்ப்பாணம்" என்ற உயர் தகுதிப்பாட்டை எம்மவர்க்கு வழங்கியுள்ளது.

24 6 18 அன்று திறப்பு விழாவும் 25 6 18 அன்று குடமுழுக்கு விழாவும் நடைபெற்றன. அவுஸ்திரேலியா, சிட்னியில் வாழும் இதய வயித்திய நிபுணர் மனமோகன், சிவகௌரி தம்பதியரின் உபயமாகக் கிடைத்த காணியில், அவர்களின் உபயமாக அமைக்கப்பட்ட கோயில் உயர்ந்து நிற்கிறது. கோயிலில் மூலவராகத் தட்சணாமூர்த்தி, அவர் முன்னால் நந்தியெம்பெருமான், அதற்கும் முன்னால் கற்றேர் அமைந்துள்ளன. சிவலிங்கத்துடன், மணிவாசகர் என அரண்மனை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் கிழக்கு, மேற்குப் புறங்களில் 656 திருவாசகப் பாடல்களும் கருங்கல்லில் மனித வலுவினால் உளி கொண்டு செதுக்கப்பட்டுள்ளன.

ஈழத்து இந்து சமய வளர்ச்சியில், நாவற்குழி மண் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகும். சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது அவரை நாவற்குழியிலிருந்து பெரும் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்களாம். அவர் அங்கிருந்து குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் பவனியாக யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டார் என்கின்றனர்.

யாழ்ப்பாணத்தவரின் உணவுக் களஞ்சியமும் நாவற்குழியிலேயே அமைந்திருந்தது. போர்ச் சூழலில் இதன் அருமை பலராலும் உணரப்பட்டது. இந்த உணவுக் களஞ்சியத்துக்கு முன்பாகவே கோயில் வளாகம் அமைந்துள்ளது.

செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு திருமுருகன் அவர்கள் சொற்பொழிவு ஒன்றுக்காக மூன்றாண்டுகளுக்கு முன்னர் திருவண்ணாமலை சென்றபோதே இக்கரு உதயமானது. "திருமந்திரமும் திருவாசகமும்" என்ற பொருளில் அவர் உரையாற்றியபோது, அங்கிருந்த ஒரு சித்தர் திருமுருகனாரை ஆசீர்வதித்து, "திருவாசகத்தை யாழ்ப்பாணத்தில் நீ காப்பாற்றுவாய். காற்று, மழை, நெருப்பு என எவையும் தீண்டாத வண்ணம் அதைப் பாதுகாக்கக் கூடிய பணியை மேற்கொள்ளக்கடவாய்." என்றாராம்.

டிஜிற்றல் யுகத்தில் திருவாசகத்தைக் காப்பாற்ற இணையம் உள்ளதுதானே எனப் பலரும் நம்பிக்கை கொண்டுள்ள நிலையில், எக்காலத்திலும் அழியாத ஒரு வடிவில் திருவாசகத்தைப் பேணும் முயற்சியாக திருவாசக அரண்மனை அமைக்கும் ஆணை மறைபொருளாக அந்தச் சித்தராலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பல நற்பணிகளை இன்று அம்மண்ணில் முன்னெடுக்கும் சிவபூமி அறக்கட்டளையின் வாயிலாக இப்பணி நடந்தேறியுள்ளது.

சோழர்காலக் கட்டடக் கலைக்கு ஒப்பாக தஞ்சைப் பெருங்கோயிலை நினைவுறுத்தும் வகையில் முப்பதடி உயரத்தில் விமானம் நிமிர்ந்து நிற்கின்றது. அதில், சிவலிங்கங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கருவறையில் தட்சிணாமூர்த்தி குடிகொள்ளும் முதற்கோயிலும் இதுதான். கருங்கல்லில் நான்கரை அடி உயரமுள்ளவராக இந்த ஞானகாரகன் விளங்குகிறார். விமானத்தில் சிவலிங்கங்கள் அமைக்கப்பட்ட கோயிற் சிறப்பம் இங்குள்ள தனித்துவங்களில் ஒன்று எனலாம். ஊரெழு சண்முகநாதனின் கைவண்ணமும் தென்னிந்தியச் சிற்பக் கலைஞர் புருஷோத்தமனின் கலை வண்ணமும் திருமுருகனாரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்துள்ளன. இதைவிட நல்லுள்ளம் படைத்த சான்றோர் பலர் நிதி வழங்கி இக்காரியம் செயற்பட உதவி யுள்ளனர். ஏறத்தாழ நானூறு இலட்சம் ரூபா மதிப்பில் பணிகள் இடம்பெற்றதாக மதிப்பிட முடிகின்றது. கோயிலின் உட்பிராகரத்தில் கிழக்கு மேற்கு சுவர்களில் 656 திருவாசகப் பாடல்களும் கருங்கற்களில் கைகளாற் செதுக்கப்பட்டுள்ளன. பாரதிபுரத்தைச் சேர்ந்த 29 வயது இளைஞரான விநோத் என்ற கலைஞர் இந்த வரலாற்றுப் பணியைச் செய்துள்ளார். இவர் புகழுடைய சின்னங்களில் தன் கைவினையை வெளிப்படுத்திய தேர்ச்சி மிக்கவர். இன்று பக்தி சார்ந்த வரலாற்றுப் பணியை மேற்கொண்டு பெருமைபெற்றுள்ளார்.





இதைவிட, கிழக்கு, மேற்கு உட்பிரகாரத்தில் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின்மேல் 108 மணிகளும் காணப்படுகின்றன. அடியவர்கள் தங்கள் விருப்பப்படி அபிஷேகித்து ஆனந்திக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.






இதைவிட, வாயிலில் சிவபுராணத்தைக் கிரந்தம், சீனம், தங்கோலோ, சிங்களம் முதலான பன்னிரண்டு மொழிகளில் மொழிபெயர்த்து 30அடி நீளச் சுவரில் அமைத்துள்ளனர். கோயிலில் எவ்வேளையும் திருவாசகம் ஒலித்துக்கொணடிருக்கும் ஒலிப்பொறி முறையையும் ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் திருவாசக ஆராய்ச்சி நூல் நிலையம், யாத்திரிகர் தங்கும் அறை, பூசகர் அறை, களஞ்சிய சாலை, பாகசாலை எனக் கோயிலுக்குரிய இதர அம்சங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சைவாபிமானிகளின் பெருங்கனவொன்று நனவாகி இருக்கின்றது. உலக நாடுகளில் பைபிளை வெள்ளைக் கற்களிற் பதித்துள்ளனர். திருக்குரானை, மகாபாரதத்தை கற்களில் எழுதிப் பதிவு செய்துள்ளதாகக் கூறுகின்றனர். சைவப் பக்தி இலக்கியமாகிய திருவாசகத்தைக் கற்களில் எழுதிய சாதனை யாழ்ப்பாணத்திலேயே நிகழ்ந்திருக்கின்றது. இதனை எமது இளஞ் சந்ததியினர் அவசியம் பார்வையிட்டுப் பயன்பெறவேண்டும். பாடசாலை அதிபர்கள் பெற்றோர்கள் இத் தெய்வத்திருப்பணியைத் தமது பிள்ளைகளுக்கு உணரவைக்கவேண்டும், எங்களிடம் இருக்கின்ற இந்து அமைப்புக்கள், பஜனைக் குழுவினர் வருடம் முழுவதும் திருவாச முற்றோதல் மேற்கொள்ளக்கூடிய நியமத்தை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை சிவபூமி என்பதை மெய்ப்பிக்கும் காரியம் ஒன்று திருமுருகனார் வாயிலாக நிறைவேறியிருக்கின்றது. தெய்வம் அவருள் நின்று இயக்கி இருக்கின்றது என்றால் மிகைப்படாது. ஒரு தெய்வத் திருப்பணியை நிறைவேற்றிய அவருக்கு நன்றி உரைக்க வார்த்தைகள் இல்லை.





**நன்றி: இந்துசாதனம் ஆனி இதழ்**

# ஆவுடையார் கோயில் எனப்படும் திருப்பெருந்துறை

திரு க தியாகமூர்த்தி




திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் கட்டுவித்த கோயில் இது என்று அறியப்படு கிறது. தென்னிந்தியாவில், தமிழ்நாடு மாநிலத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் இக் கோயில் அமைந்துள்ளது. தம்மைச் சிவ பெருமான் ஆட்கொண்ட இந்தப் புனித தலத்தில் உள்ள சிவனை மாணிக்கவாசகர், **"திருப்பெருந் துறையுறை சிவனே"** என விழித்துப் பாடியருளியுள்ளார்.

இக் கோயிலிலே தினமும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத் தினமான ஆனி மகத்தையும், மார்கழித் திருவாதிரையையும் ஒட்டி இரு பெரிய திருவிழாக்கள் இந்தக் கோயிலிலே நடைபெறுகின்றன. திருவிழாக் காலங்களில் இடப வாகனத்திலும் தேரிலும் மாணிக்கவாசகரே உற்சவ மூர்த்தியாக எழுந்தருளுகிறார். சிவராத்திரி, பங்குனி உத்தரம், கந்தர் ஷஷ்டி, திருக்கார்த்திகை, சோமவாரம், ஆவணிமூலம் முதலான தினங்களிலும் இந்தக் கோயிலில் விசேஷ பூசைகள், வழிபாடுகள் நடைபெறுகின்றன. ஆவுடையார் கோயில் என்று தற்காலம் குறிக்கப்படும் இத்தலத்தில் உள்ள கற்சிற்பங்கள் அனைத்தும் மிக நுண்ணிய வேலைப்பாடும் அழகும் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. இந்தச் சிற்பங்களைக் கொடுங்கைச் சிற்பங்கள் எனக் குறிப் பிடுகின்றனர். அடியார்களும் சுற்றுலாப் பயணிகளும் இக்கோயிலுக்குச் சென்று இந்த அழகிய சிற்பங்களைக் கண்டு தரிசித்துக் களிக்கின்றனர். மாணிக்கவாசக சுவாமிகளை அலங்காரமாக, அழகான அமைச்சர் கோலத்திலும், துறவு பூண்ட கோலத்திலும் ஒரே தூணிலே செதுக்கியுள்ளார்கள். பலவிதமான குதிரைகள் பல்வகைக் கோலங்களிலும், சிவ பெருமானைப் பரிமேலழகரான கோலத்திலும் அழகாகச் செதுக்கியுள்ளதையும் இங்கே காணலாம்.



மூன்று பிரகாரங்களை (வீதிகளை)க் கொண்ட இக்கோயிலை ஏழு நிலைகள் கொண்ட பிரமாண்டமான கோபுரம் அலங்கரிக்கிறது. பெரிய மண்டபத்தை அடுத்துள்ள மண்டபத்தில் மூலவராக ஆவுடையார் இலிங்கம் உள்ளது. அம்பிகையின் பெயர் யோகாம்பிகை. யோக பீடம் என்பதால் அம்பிகை உருவம் இன்றி, அருவமாகக் காணப்படுகின்றது. இவ் வாலயத்தில் திருத்தமாம் பொய்கை என்ற பெரிய தீர்த்தம் உட்படப் பல தீர்த்தங்கள் உள்ளன.

ஆன்மாக்கள் பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேற உதவும் துறை என்பதால் உலகம் இத்தலத்தைத் திருப்பெருந்துறை என்று போற்றுகின்றது. திருவாசகம் படித்து மகிழ்ந்த பலரும் அந்தத் திருவாசகத்தை அருளிய மணிவாசகர் ஆட்கொள்ளப்பட்ட தலம்



இதுவென்று பேரன்புடன் இத்தலத்தைத் தரிசிக்க வருகின்றனர்.

திருப்பெருந்துறை ஆத்மநாதசுவாமி திருக் கோயில் தெற்குநோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்குள்ளே மூன்று பிரகாரங்கள். வெளியே தேரோடும் வீதி. இந்தக் கோயிலில் கொடிமரம், பலிபீடம், நந்தி, சண்டேசுரர், ஆகிய எதுவும் இல்லை. சிவபெருமானும் அருவமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இங்கே எல்லாமே ஞானமயம். இராஜகோபுரத்துடன் இணைந்து பெரிய மண்டபம் உள்ளது. இதன் தெற்கு முகப்புத் தூண்களில் நரசிம்மர், ஊர்த்துவத்தாண்டவர், பிச்சாடனர், வேலேந்திய முருகன், காளி, இடபவாகனத்தில் சிவன், சங்கரநாராயணர் என ஏழு சிற்பங்கள் உள்ளன. இரு பெரிய தூண்களில் துவாரபாலகர் சிற்பங்கள் உள்ளன. குதிரை வீரர்களின் சிற்பங்கள் நான்கு தூண்களை அலங் கரிக்கின்றன. பெரிய மண்டபத்துடன் இணைந்து மேற்கில் மாணிக்கவாசகரை மூலவராகக் கொண்ட கோயில் உள்ளது. பழைமையான இக்கோயிலில் மாணிக்கவாசகர் கிழக்கு முகமாக எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம், பிரகாரம், விமானம் ஆகிய அமைப்புக்கள் உள்ளன. ஏழு நிலை இராஜகோபுரம் கம்பீரமாகக் காட்சிதருகிறது.

மூன்றாம் பிரகாரத்தில், தென்மேற்கு மூலையில் உள்ள நாலுகால் மண்டபத்தில் வெயில் உவந்த விநாயகர் கிழக்குமுகமாக எழுந்தருளியுள்ளார். மூன்று விநாயகத் திருமேனியுள் நடுவே இருப்பவரே பிரதான மூர்த்தி. இவரை வணங்கி வழிபட்டபின்னரே கோயிலுக்குள் சென்று வழிபடுதல் மரபு. இந்த மண்டபத்துக்கு வடக்கே அக்கினி தீர்த்தம் உள்ளது. இதற்கும் வடக்கே தியாகராச மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் மேற்தளத்தில் கருங்கல்லாலான சங்கிலி தோன்றுகிறது. இச்சங்கிலி ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தின் தலவிருட்சம் குருந்தமரம். மாணிக்கவாசகர் பெற்ற நயனதீட்சை (பார்வை), ஸ்பரிஸ தீட்சை (தலையிலே தொட்டு ஆசீர்வதித்தல்), திருவடி தீட்சை (இறைவன் தன் பாதத்தால் மணிவாசகரை தீண்டியமை) ஆகிய காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

வேறு விசேடங்கள்:

புழுங்கல் அரிசியிற் பிரசாதம் செயயப்படுகிறது. தீபங்களை தொட்டுக் கும்பிடுவதை அநுமதிப் பதில்லை. மணிவாசகர் ஒளிமயமாக இருக் கிறார் என்ற நம்பிக்கை இதற்குக் காரணமாக இருக்கிறது. இந்தக் கோயிலில் மணி வாசகருக்கே முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது.

இக் கோயிலை முழுமையாக இரசித்து, சிற்பங்களின் அழகைப் பார்த்து அநுபவித்து வழிபட்டு வருவதற்கு ஒரு முழுநாள் தேவைப்படும்.

காரைக்குடி, பட்டுக்கோட்டை, புதுக்கோட்டை ஆகிய ஊர்கள் இந்தக் கோயிலை அண்மித்தவை. இந்த ஊர்களிலிருந்து செல்லும் பேருந்துகள் மூலம் இக்கோயிலை அடை யலாம். தொடருந்து (ரயில்) மூலம் செல்ல விரும்புவோர் மயிலாடுதுறை - காரைக்குடி செல்லும் வழியில் அறந்தாங்கி நிலையத்தில் இறங்கி தென்கிழக்குத் திசையில் உள்ள இக்கோயிலைப் பதினைந்து மைல் பயணம்செய்து அடையலாம்.

# கதிர்காமத்தில் புத்தாண்டுவிழா

சாவகச்சேரியூர் Dr கதிர்காமநாதன்

சித்திரைப் புத்தாண்டு: வசந்தம் வருவதும், தென்றல் வீசுவதும், குயில் கூவுவதும், பூக்கள் மலர்வதும், காதலர் களிப்பதும் மக்கள் மனத்தில் மகிழ்ச்சி பொங்குவதும் இந்தப் புத்தாண்டிலேதான். சித்திரைப் பௌர்ணமி, சித்திரபுத்திரர் கதை படித்தல், போர்த்தேங்காய் உடைத்தல், சித்திரைக் கஞ்சி உண்ணுதல் போன்ற யாவும் நடப்பது இந்தச் சித்திரை மாதத்திலேதான். மேட இராசியில் சூரியன் பிரவேசிக்கும் நாளே சித்திரைப் புத்தாண்டாகும்.

**கதிர்காமம்:**

கதிர் - ஒளி, காமம் - அன்பு இறைவன் ஒளி வடிவானவன். ஆதலால் இறையருள் உடைய அன்பால் அணைக்கும் தலம். முக்கோண வீதி கொண்டு நீள்சதுரமான சிறிய கோயில். கோபுரமோ, சிற்பங்களோ கிடையாது. மூர்த்தி, தலம், தீர்த்தம் யாவும் அமையப்பெற்ற இவ்வாலயத்தின் கீர்த்தி, அருள், ஈர்ப்பு, காந்தசக்தி யாவும் இமயம் போன்றவை. இங்குதான் வேடுவ வள்ளியை முருகன் கண்டு காதலித்துத் திருமணம் செய்தார் என்பது ஐதீகம். இதனால் போலும் தெற்கு நோக்கிய முருகன் வடக்கே பார்க்கும் வள்ளியைப் பார்த்துக்கொண்டே இருக்கிறார். பல சமயத்தவரும் வழிபடும் தெய்வத்தன்மை கொண்ட இந்தத் தலம் அருணகிரிநாதராற் பாடப்பெற்றது.

**பயணம்:**

*2018 - 04 - 13* அன்று கொளும்பில் இருந்து புறப்பட்டு, வெயிற் காலம் என்பதால், குளிரூட்டப்பட்ட வண்டியில் தேசிய நெடுஞ்சாலை வழியாகச் சென்றோம். இதனால், சுகமாகவும் விரைவாகவும் பயணம் செய்ய முடிந்தது. வழியில் பல கிராமங்களையும் சில அழகான இடங்களையும் பார்க்க முடிந்தது. மதிய உணவுக்காக ஒரு நெடுஞ்சாலை உணவகத்தில் (Service Station) நிறுத்தினோம். நிறைய வாகனங்கள் நிறுத்துமிடத்துடன் வசதியாக இருந்தது. மக்கள் நிறைந் திருந்தார்கள். அங்கே பலவிதமான கடைகள் இருந்தன. நாங்கள் இருநூறு ரூபாவுக்கு அளவு சோறும் மரக்கறியும் வாங்கி, கிடைத்த இடத்தில் அமர்ந்து ஆறுதலாக உண்டோம். அது போதுமானதாக இருந்தது. அங்கிருந்த Food City கடையில் நமக்குத் தேவையான பழவகைகள், தண்ணீர், பற்பசை, யானை மார்க் Orange Barley போன்ற பொருள்களை வாங்கினோம். இரவு *7* மணியளவில் திசமகர கமவில் இருக்கும் Hotel Tamrind Tree இல் தங்கினோம். இங்கு ஓர் அதிர்ச்சி கிடைத்தது. வரவேற்பு மேசையில் இருந்தவர் எம்முடன் தமிழிலே பேசினார். ஆச்சரியப்பட்டு, எப்படித் தமிழ் தெரியும் என்று நாம் வினாவ, தான் நீர்கொளும்பிலே இருந்ததாகச் சொன்னார். குளிர்பானமும் கொடுத்து எம்மை உபசரித்தார். நீங்கள் முன்பு தமிழர்கள்தான், தற்போது மாறி விட்டீர்கள் என்று நான் கூறியபோது அவர் அதற்கு மறுப்பேதும் தெரிவிக்கவில்லை.

**வருடப்பிறப்பு:**

அதிகாலை எழுந்தவுடன், முதல் நாள் கொளும்பிலிருந்து எடுத்துச் சென்ற மருத்துநீரைத் தலையில் தேய்த்து நீராடினோம். பின்னர் புறப்பட்டு, கதிர்காமத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் இருக்கும் செல்லக் கதிர்காமம் என்று குறிப்பிடப்படும் இடத்திலுள்ள மாணிக்கப்பிள்ளையாரைத் தரிசிக்கச் சென்றோம். முதலாவதாக வணங்கவேண்டிய முதல்வர் அவர் அல்லவா? செல்லும் வழியில் சாலை அருகில் இருபக்கமும் புளியமரங்கள் அணிவகுத்து நிற்பதுபோலக் காட்சி கொடுத்தன. அந்த அழகைக் கண்டு இரசித்தோம். ஆலயத்தை அடையும்பொழுது காலை *5.45* மணியாகியிருந்தது.

**மாணிக்கப்பிள்ளையார் கோயில்:**
இதைப் பழைய கதிர்காமம் என்று குறிப்பிடுவர். ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் இவரை ஆன்மிகவாதிகள் அதிசக்தி வாய்ந்த விநாயகராகக் கருதுகின்றனர். நாங்கள் சென்றபோது அருகில் பாயும் மாணிக்க கங்கையில் சிலர் நீராடிக்கொண்டிருந்தனர். ஆலயத்தின் முகப்பில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கோபுரத்தைக் கண்டோம். இது வேலைப்பாடுகள் கூடியதாக உருவாகின்றது. வலதுபக்கத்தில் மக்கள் பொங்கல் செய்வதைக் கண்டோம். உள்ளே சென்றோம். கோயிற் கதவு அடைத்திருந்தது.

சிலர் வழிபாட்டுக்காக் காத்திருந்தனர். ஒலி நாடாவில் மங்கலமான நாதசுர இசை ஒலித்துக்கொண்டிருந்தது. எம்மை வரவேற்பது போல அது இருந்தது. எமது கலாசாரம் இங்கும் இருக்கிறதே என்று உணர்ந்ததில் மகிழ்ச்சியாக இருந்தது.



6 மணிக்கு மணியோசையோடு முன்னே ஒருவர் கொடி பிடித்துவர, அவருக்குப் பின்னால் இன்னொருவர் அன்றைக்குரிய பூசைப் பொருள்களைக் குடைபிடித்துக் கொண்டுவந்தார். சிவப்பு உடை அணிந்து, சிவப்புத் துணியால் வாயை மூடிக்கட்டியபடி பூணூல் அணிந்த ஒரு சிவாசாரியரும் அன்றைய உபயகாரரும் மலையிலிருந்து கீழிறங்கி வந்தனர். மனத்தை நிறைக்கும் காட்சியாக இது இருந்தது. கதவு திறந்தது. முதலில் அர்ச்சகர் வாய் கட்டியபடியே பூசை செய்தார். பின்னர் வாய்க்கட்டை அவிழ்த்துவிட்டு, மந்திரங்கள் ஓதிப் பூசை செய்தார். தூப தீபங்கள் ஆரத்தி காட்டி, ஆறுதலாக, மன அமைதி தோன்றும் வகையில் பூசை நடந்தது. விநாயகர் விக்கிரகம் மிகவும் சிறியது. அலங்காரத்துடன் மிக அழகாகக் காட்சி கொடுத்தார். கோயிலைச் சுற்றியிருக்கும் துர்க்கைக்கும் அநுமன், நவக்கிரகம், உற்சவர், பலிபீடம் ஆகியவற்றுக்கும் கிரமமாகவே பூசை நடந்தது. சுமார் ஒருமணி நேரம் வரை பூசை நடந்தது. ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வயானையுடன் இருக்கும் மூர்த்தம் அண்மையிலேதான் பிரதிட்டை செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் நடந்ததாக அறிந்தோம்.

**கணபதி நாமாவளி:**
சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சிட்ட துண்டுப் பிரசுரம் யாவருக்கும் கொடுக்கப்பட்டது. குழுமியிருந்தோரில் அதிக மானவர் சிங்களவரே. ஆனால் அனைவரும் ஒருமித்து நாமாவளி பாடிக் கூட்டுப்பிரார்த்தனை செய்தனர். அப்போது பேதம் ஏதும் தெரியவில்லை.

பின்னர், விபூதிப் பிரசாதம் கொடுக்கப்பட்டது. உபயகாரரும் தாம் பூசைக்கெனக் கொண்டு வந்த பொருள்களை - பிரசாதத்தை அங்கு அனைவருக்கும் கொடுத்தனர். அங்கு பொங்கிக்கொண்டு இருந்தோருக்கும் கொடுத்தனர். பிரசாதம் உண்டதில், காலை உணவு தேவையின்றிப் போய்விட்டது. அன்று அங்கு வந்திருந்த ஒரு வர்த்தகப் பிரமுகர், தான் ஆறு ஆண்டுகளாக முயன்றும் அன்றுதான் கதிர்காமம் வரும் முயற்சி கைகூடிற்று என்று கூறி மகிழ்ந்தார்.

புத்தாண்டு என்றாலும், வேறு சாதாரண தினம் என்றாலும் கதிர்காமத் தலத்தில் பணம் (சில்லறை) கண்டெடுத்தால் அதை அதிட்டம் என்றும் இறைவன் அளித்தது என்றும் அதைப் பத்திரமாக வைத்திருக்கவேண்டும் என்றும் ஒரு ஐதிகம் உண்டாம். வழிபாட்டைப் பூர்த்தி செய்யும் வண்ணமாக தேங்காயில் கர்ப்பூர தீபமேற்றி, கணபதியாரை வணங்கி உடைத்து வழிபட்டு வெளியே வந்தோம். கடைத் தெரு

சென்று "தொதல்" வாங்கினோம். இங்குள்ள தொதல் பிரபல மானது. எப்போதும் உற்றார், உறவினர், நண்பர்கள் விபூதியோடு இத் தொதலையும் ஆவலோடு எதிர்பார்ப்பார்கள்.

புத்தாண்டு விருந்தாக Bank of Ceylon மதிய போசனம் அமைந்திருந்தது. இதற்கு முன்கூட்டியே அவர்களுக்கு அறிவிக்க வேண்டும். ஒரே கூட்டம். Buffet முறையில் உணவு. தலைக்கு 300 ரூபா. 2,3 சோறுவகை, பலவித சைவக் கறிகள், இலை குழைகள், பச்சடி, அச்சாறு, வாழைப்பழத்தோடு வழங்கினார்கள். உணவு பிரமாதம். யாவருக்கும் முழுத் திருப்தி.

**இரவு விழா:**

கதிர்காமம் கோயிலுக்கு இரவு 7 மணிபோற் சென்றோம். வீதிவழியே போகாதபடி காவல் துறையினர் தடுத்தனர். வீதி இரு மருங்கிலும் வெள்ளை உடை அணிந்த மக்கள் கூட்டம். வீதி ஒரே வெள்ளையாய்க் காட்சியளித்தது. எள் போட்டால் எண்ணையாகுமளவுக்கு கூட்டம். நமது வண்டி போக இயலவில்லை. நத்தை வேகத்திலேதான் நாங்கள் போக முடிந்தது. அநுபவமுடைய எமது வண்டிச் சாரதி எம்மைத் தெய்வயானை அம்மன் கோயில் ஊடாக அழைத்துச்சென்று அதன் மேற்கு வாயிலில் முன்வரிசையில் நிற்கவைத்தார்.

**முருகன் உலா:**

ஒரு பெண்மணி கொடி பிடித்தபடி முதலில் சென்றார். இவரைத் தொடர்ந்து பல பெண்கள் ஒரு அணியாகக் கொடி பிடித்தபடி சென்றனர். நீல நிற உடையணிந்த இன்னொரு பெண்கள் அணியினர் பூக்களைக் கொண்டு சென்றார்கள். இன்னொரு அணி மங்கல உடையணிந்து இசைக்கு ஏற்பப் பலவிதமாக ஆடிக்கொண்டு சென்றது.

**கண்டிய நடனம்:**

ஆண்கள் மேளம் வாசித்தபடி கண்டிய நடனம் ஆடிக்கொண்டு சென்றனர். அலங்கரிக்கப்பட்ட யானை அவர்களைத் தொடர்ந்து சென்றது. பசுமையான பச்சை நிற உடையணிந்த நீண்ட கூந்தலுடன் பெண்கள் ஆடியபடி செல்ல, அதற்கடுத்து வெள்ளி முலாம் பூசியதுபோல உடையணிந்து சிறப்பான தலையலங் காரத்தோடு ஒரு பெண்கள் அணி ஆடியபடியே சென்றது. அவர்களுக்குப் பின்னால் இன்னொரு யானை சென்றது. கண்டிய நடனத்துடன் வேடுவப் பெண்கள் போல உடையணிந்த பெண்கள் செல்ல, அவர்களின் பின்னால் பிரபுக்கள் போல வேடமணிந்த கோயிற் பிரமுகர்கள் பின் சென்றனர்.

**அநுமன் அணி:**

அநுமன் வேடமணிந்து ஒரு கூட்டம் வாலை ஆட்டியபடி கையிலே கதையைப் பிடித்துக்கொண்டு பாய்ந்து பாய்ந்து வந்தது. இவர்கள் முகமூடி போட்ட ஆண்கள். இவர்களின் பின்னால் தாடி மீசையோடு மிடுக்காக ஆண்கள் பவனி நடந்தது.

**கரக ஆட்டமும் காவடி ஆட்டமும்:**

அலங்கரிக்கப்பட்ட கரகத்தைத் தலையில் வைத்தபடி சிவப்பு உடையணிந்த பெண்கள் இசைக்கு ஏற்ப ஒய்யாரமாக ஆடிவந்தனர். அதைத் தொடர்ந்து தவில் இசைக்குக் காவடி ஆட்டம் ஆடியபடி இன்னொரு கூட்டம் வந்தது.

**மயில் நடனம்:**

நீலநிற உடையில் மயில் தோகை விரிப்பது போல நடனமாடியதைப் பார்க்க மிகவும் நேர்த்தியாக இருந்தது. மனதுக்கும் குதூகலம் கொடுத்தது. இந்தப் பெண்கள் அணிக்கு ஒரு சபாஷ். உடுக்கு வாசித்தபடி இன்னொரு ஆண்கள் அணி பாடிக்கொண்டு சென்றது. கரகம், காவடி, உடுக்கு இசை, மயில் நடனம் யாவும் முருகனை நினைவுறுத்துவதாக இருந்தன.

கதிர்காமம் - காவடிக் கந்தன்
நல்லூர் - அலங்காரக் கந்தன்
மாவிட்டபுரம் - அபிஷேகக் கந்தன்
சந்நிதி - அன்னதானக் கந்தன்

**கதிர்காமக் கந்தன் பவனி:**

வள்ளி மணவாளன் பெரிய தந்தமுடைய யானையில் ஆரோகணித்து அருள்பாலிக்க வந்தார். யானை தனது துதிக்கையில்

முருகனுக்கு மாலை கொண்டுசெல்வதையே நாம் கண்டோம். முருகன் நாம் நின்ற இடத்துக்கு முன் வந்து நின்றார். அப்போது கர்ப்பூர ஆரத்தி காட்டப்பட்டது. இதைத் தெய்வயானை அம்மன் கோயில் அர்ச்சகர் சிவப்பு நிற உடையணிந்து சிவப்புத் துணியால் வாயைக் கட்டியபடியே செய்தார். இந்த நிகழ்வு பசுமரத்தில் அறைந்த ஆணிபோல் மனத்துள் நிறைந்தது.

சிறு வயதுமுதல் ஒவ்வொரு வருடமும் புதுவருட விழாவுக்குப் பெற்றோருடன் செல்லும் பேறு பெற்றவன் நான். அந்தக் காலத்தில் ஒரு யானைதான் வரும். இப்படி யான அணிவகுப்புக்கள் இல்லை, பெருங் கூட்டமும் இல்லை. முருகன் வீதிவலம் வந்து வள்ளியிடம் செல்வார். சுமார் நாற்பது வருடங்களுக்குப் பின்னர்தான் மறுபடியும் புத்தாண்டு விழாவை பார்க்கும் அருள் கிடைத்தது.

முருகன் அலங்கரிக்கபப்பட்ட பட்டுத்துணியால் மூடப்பட்ட மலர்கள் தூவப்பட்ட ஒரு பெட்டியினுள் இருந்தார். இவரின் தோற்றம் பரமரகசியமாகவே இருக்கிறது.

இங்கு பூசை செய்பவர்களைக் கப்புறாளை எனக் குறிப்பிடுவர். நாங்கள் புதுவருட மறுநாள் அதிகாலை சென்றோம். கதிர்காமக் கந்தனின் வழிபாட்டில் முக்கியமாக முதலில் இரு வேடுவப் பேரிளம் பெண்கள் வந்தனர். திரையில் இருக்கும் வள்ளி தெய்வான சகிதம், மயில்மீதிருக்கும் ஆறுமுக சுவாமியை வணங்கினர். பின்னர் கப்புறாளையிடமிருந்து ஒருவர் பின் ஒருவராக விளக்குப் பெற்றனர். தீபமேற்றியபின், முன்னால் வந்து குந்தி எதிராக இருந்து மேலும் கீழுமாக விளக்குக்களை அசைத்து அசைத்து ஆரத்தி எடுத்தனர். இது முருகனை வரவேற்பதுபோல அமைந்தது. இதன் பின்னர் யாவரும் மேலே தொங்கும் மணிகளை அடிக்க, மேளங்கள் முழங்க, சங்கு ஊத, வாசலில் இருக்கும் கோபுர மணி நாதம் எழுப்ப விரித்த சுருள் கம்பளம்போன்ற பாய் மீது கப்புறாளை வாய்கட்டி நைவேத்தியத்தை காவிச் சென்றார். உட்பூசை முடிவடைந்ததும் திரைச்சீலை முன்வந்து ஓங்கார வடிவாக கைகள் இரண்டையும் தலைமேற் குவித்து வழிபட்டார்.



**“ஒருவன் தான் வேறு எதைத்தான் செய்ய முடியாதிருந்தாலும், தன் இரு கைகைளைச் சிரசின்மேற் குவித்து வழிபடுவதால், அவனுடைய உருவம் வேலின் உருவத்தை ஒக்கும். அப்போது அவன் வேலாகி, வீரன் கை வேலாகி விடுவான்”**

- டி வி கிருஷ்ணசாமி ஐயர்

வழிபாடு முடிவில் அர்ச்சனை செய்து பிரசாதம் பெற்றோம்.

**வழிபாடு:**

கதிர்காமத்தில் தொல்காப்பியம் கூறும் கந்தழி வகையான வாய்கட்டி வழிபடும் முறையே பின்பற்றப்படுகிறது. ஒரு பற்றுமற்று, அருவாய் தானே நிற்கும் தத்துவங்களைக் கடந்த பொருளை வழிபடும் முறையே கந்தழியாகும்.

**மாப்பிள்ளை:**

வள்ளி திருமணம் முருகனுக்கு நடந்த இடம் கதிர்காமம் என்றபடியால் இங்குள்ள பழங்குடி மக்கள் முருகனை "மாப்பிள்ளை" கடவுளாகக் கருதுகின்றனர்.

**ஓர் உண்மை நிகழ்வு:**

ஒரு தம்பதியினர் காலை 10மணிப் பூசைக்கு சென்றனர். கோயிலில் உள்ளே புகமுடியாத அளவு கூட்டமாக இருந்தது. பலரும் வெளியே நிற்கவேண்டிய கட்டாயம். கப்புறாளை பூசை ஆரம்பிக்க முன்னர் யாவரும் அதிசயிக்கும் வண்ணம் வெளியே வந்தார். இத் தம்பதியை சைகை மூலம் காட்டி, கூட்டிச்சென்று முன்னின்று பூசையையும் பார்த்து வழிபட வைத்தார். இறுதியில் இவர்களுக்கு இறைவனுக்கு வைத்த இளநீரை, பழ வகைகளை, பிரசாத்தை கிடைக்கவைத்தார். இச்சம்பவம்போல் வேறு சிலருக்கும் நடந்தது உண்டு. கப்புறாளை கூலிக்கு மாரடிப்பவர்கள் அல்லர். நம்பிக்கையாய், விசுவாசமாய் பயபக்தியுடன் மானசீகமாய் வழிபாடு செய்பவர்களே. மாப்பிள்ளை அருள் பெற்றதால் போலும், முன்பின் தெரியாத முருகபக்தி, இறையுணர்வு கொண்டோரை அழைக்கின்றனர்.

**திருவிழாக்கள்:**

ஆண்டுதோறும் 4 திருவிழாக்கள் நடை பெறுகின்றன. முதல் திருவிழா சித்திரை வருடப் பிறப்பாகும். இரண்டாவது ஆனி அல்லது ஆடி மாதத்தில் பந்தற்கால் நாட்டும் திருவிழா. மூன்றாவது ஆடி அல்லது ஆவ ணியில் 15 அல்லது 16 நாள்கள் நடைபெறும் பெரும் விழா. நான்காவது கார்த்திகை மாதத் திருக்கார்த்திகை விளக்கீடு திருவிழா. திரு விழா நாள்களில் நித்திய பூசை நேரம் மாறுபடும்

**வாய்கட்டி வழிபடல்:**

யாழ்ப்பாணத்தில் தொண்டமானாறு சன்னதி கோயில், மட்டக்கிளப்பில் மண்டூர் கோயில் மூன்றவதாகக் கதிர்காமம் இம்மூன்றும் முருகன் கோயில்கள் மாத்திரமன்றி அதிசக்தி, பேரருள் கொண்டவை என்பது குறிப்படத்தக்கது.

சிவபூமியெனும் இலங்கையின் தென்பகுதியின் ஊவா மாகாணத்தில், திரைமறைவில் வீற்றிருந்தும், திசையனைத்தையும் ஆளும் கதிர்காமக்கந்தனை பாதயாத்திரையாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து நேரடி பஸ் மூலமாகவோ புகைரத மார்க்கமாகவோ சுலபமாக அடையலாம்.

**கதிர்காமக் கந்தனுக்கு அரஹர**

**கதிரகாம வெற்பில் உறைவோனே**
**கனகமேரு வொத்த புயவீரா...**

**கனகமாணிக்க வடிவோனே மிக்க**
**கதிர்காமத்தில் உறைவோனே...**

**மணிதரளம் வீசி அணியருவி சூழ**
**மருவு கதிர்காமப் பெருமாளே**

\- அருணகிரிநாதர்

**பின்குறிப்பு:**

காட்டுக்குள் இருக்கும் கதிர்காமக் கந்தனைக் காண ஆண்டுதோறும் தொண்டமானாறு சன்னதி கோயிலில் இருந்து அடியார்கள் பாதயாத்திரை செய்வர். பூர்த்தி செய்ய முப்பது நாள்கள் ஆகும். கதிர்காமத்துக்குச் சமீபத்தில் உள்ள வன, துஷ்ட, பயங்கர விலங்குகளைக் கொண்ட யால காட்டைக் கடந்து செல்லும்போது அரோகரா என்ற ஒலி வானைப் பிளக்கும். நாங்கள் புத்தாண்டு இரண்டு மணி போல் யால National Park சென்றோம். அங்கு காட்டு யானை, சிறுத்தை, கரடி, எருமை, மாடு, மான், மரை, ஓடும் முயல், ஆடும் மயில் பறக்கும் பறவைகள் மிதக்கும் முதலைகள் யாவும் கண்டோம். எம்மைக் கவர்ந்தவை இயற்கை அன்னை அளித்த வர்ணஜாலங்கள் கொண்ட சிறகுகளுடைய பறக்கும் கோழிகளே. முருகன் சேவற்கொடியோன் அல்லவா?

**வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை**
**நீயுண்டு குறைவில்லை கதிர்காமக் கந்தா**

# திருநாவுக்கரசர் திருவாழ்வில் நிகழ்ந்த வியத்தகு அருட்செயல்கள்

திருநாவுக்கரசர் சைவப்பெருங்குடியில் மருள்நீக்கியராகப் பிறந்தவர். நம்பர் அருளவில்லை என நினைத்துச் சமண சமயம் புகுந்தார். தருமசேனர் என்னும் சிறப்பு விருதோடு தருக்கங்கள் பல புரிந்தார். சமணத் தலைவர்களுள் ஒருவரானார்.

1. தன் அன்புத் தம்பி மீண்டும் சைவத்துக்குத் திரும்பவேண்டும் என்பது தமக்கையரான திலகவதியாரின் தணியாத வேட்கை. எனவே சிவபெருமான், அடிகளுக்குக் கொடிய சூலைநோயைக் கொடுத்து ஆட்கொண்டான்.

2. இறையருளால் சூலை நோயும் நீங்கியது. தாய்ச் சமயமான சைவநெறி புகுந்தார்.

3. "பாவுற்று அவர் செந்தமிழ் இன்சொல்லாய்ப் பதிகத்தொடை பாடிய பான்மையால், நாவுக்கரசு என உலகு ஏழிலும் நின்நாமம் நயப்புற மன்னுக" என்று வானிடை யாவரும் கேட்ப அருள்வாக்கு எழுந்தது. அதுமுதல், திருநாவுக்கரசு என்னும் அவருடைய திருநாமம் ஐந்தெழுத்து மந்திரமாய் உலகெங்கும் பரவியது.. இறைவன் திருவருளை நன்றிப் பெருக்கோடு நினைந்து, அடிகள் தீந்தமிழ்ப் பாமாலைகள் பல சூட்டினார்.

4. சில சமணர்கள் பல்லவ மன்னனைத் தூண்டி அடிகளைக் கொல்லச் சூழ்ச்சிகள் பல செய்தனர். நீற்றறையில் இட்டனர். அடிகள் சிவபெருமான் திருவடி நிழலையே நினைந்து ஏழு நாள்கள் நீற்றறையின் உள்ளேயே இன்புடன் இருந்தார்.

5. பின்னர் சமணர்கள் நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணச் செய்தனர். அதனை அருந்தியும் அடிகள் அமுதுண்ட ஆனந்தத்தோடு இருந்தார்.

6. பகைவர்கள் கொடிய யானையை அவர்மீது ஏவினர். அது பாகனையும் சமணரையும் வெருட்டி, அடிகளை வணங்கிப்போயிற்று.

7. நாவுக்கரசரைக் கற்பாறையில் கட்டிக் கடலில் பாய்ச்சினர். கல்லே தெப்பமாகி அடிகளைக் கரை சேர்த்தது.

8. சமணனாய் இருந்த பல்லவ மன்னன் சைவத்தின் பெருமையை உணர்ந்தான். தான் சைவமாகிச் சிவாலயங்கள் பல எழுப்பியும் சிவபுண்ணியங்கள் பலப்பல செய்தும் பெருஞ் சிவத்தொண்டனாக மாறினான்.

10. திருத்தூங்கானை மடத்தில் அடிகள் சிவபெருமான் அருளால் திரிசூலம், இடபம் இலச்சினைகளைத் தமது திருத்தோள்களில் பொறிக்கப்பெற்றார்.

11. திருநல்லூரில் சிவபெருமானின் திருவடி தம் தலைமீது வைத்தருளப் பெற்றார்.

12. திங்களூரில் நச்சரவு தீண்டி இறந்த அப்பூதி அடிகளுடைய மகன் மூத்த திருநாவுக்கரசை இறையருளால் உயிர்ப்பித்தார்.

13. திருவீழிமிழலையில் சிவபெருமானிடமிருந்து படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தார்.

14. திருமறைக்காட்டில் வேதங்கள் திருக்காப்பிட்டுப் பூட்டியிருந்த திருக்கதவைத் திறக்கப்பாடினார்.

15. திருப்பைஞ்ஞீலியில் நாவுக்கரசருக்குச் சிவபெருமான் பொதிசோறும் தண்ணீரும் தந்தருளினார்.

16. திருவையாற்றில் அடிகள் திருக்கைலாயக் காட்சி கண்டு இன்புற்றார்.

17. திருப்பூந்துருத்தியில் திருஞானசம்பந்தரது திருச்சிவிகை தாங்கி உய்ந்தார்.

18. திருப்புகலூரில் உழவாரத் தொண்டு செய்யுங்கால், இடைப்பட்ட செம்பொற் குவளையையும் நவமணிகளையும் ஓடாகவும் கல்லாகவும் மதித்து வீசி எறிந்தார்.

19. மயக்கி நின்றனர் தேவ மகளிர். இறைவனிடம் முறையிட்டு அவர்களை அகலச் செய்தார்.

21. சித்திரைச் சதயத் திருநாளில், திருப்புகலூரில் சிவானந்த ஞானவடிவாம் முத்திப்பேறு பெற்றார்.

**நன்றி: தில்லைத்திருப்பதிகங்கள்**

**தொகுப்பு: சிவனருட்செல்வர்**



சிவயோகம்

SIVAYOGAM

# இந்துக் கலாசார மையம்

128, Aurelia Road, Croydon CRO 3BF
Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333
Email: sivashakthy@sivayogam.co.uk





**குறைடனில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் மூலஸ்தானம்**

அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனை ப் பிரார்த்திக்கின்றோ ம். அம்பாளின் அருளாலும், அடியவர்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்குத் திருக்கோயில் அமைக்கும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் திருப்பணியை விரைவாக நிறைவேற்றுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம். வங்கிக் கணக்கு விபரம்

Name :- SIVAYOGAM BUILDING FUND

Account No. :- 20057541

Sort Code :- 20 21 78

Bank :- BARCLAYS BANK

நன்றி

அறங்காவலர் சபையினர்


Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
FRESH FRUITS & VEGETABLES
FROZEN FOODS
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com





**சைவ முன்னேற்றச் சங்கம்**
**ஸ்ரீ சிதம்பரேஸ்வர**
**ஆலயம்**
**கர்ப்ப நியாஸம்**
**(கருப்பேழை பதித்தல்)**
**04.06.2018**













# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Orchid Bungalow
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

Jasmine Bungalow
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592

Trinity Community Centre
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com

# GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
# LONDON - UK













**SENSEI M. RAMATHAS**

TRAINED BY MICHAEL CALANDRA

**THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF**

**ISSHINRYU WORLD KARATE ASSOCIATION**

OKINAWA - JAPAN

Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139

Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com

M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com



# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

5 Chapel Road, West Ealing, London W13 9AE
தொலைபேசி இல: 0208 810 0835 தொலைநகல் இல: 0208 840 0485, Email: info@ammanealing.org web: www.ammanealing.org

## மகோற்சவ விஞ்ஞாபனம் 2018

அம்பிகை அடியார்களே,

சொல்லும் பொருளும் என, நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும், சிவலோகமும் சித்திக்குமே

- அபிராமி அந்தாதி

இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கோவில் கொண்டு அகிலமெல்லாம் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான விளம்பி வருடம் ஆடி மாதம் 3ம் நாள் 19-07-2018 வியாழக்கிழமை மாலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து, ஆடி மாதம் 04ம் நாள் வெள்ளிக்கிழமை (20-07-2018) காலை 9.30 மணிக்கு கொடியேற்றமும், 12-08-2018 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 13-08-2018 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 15-08-2018 இரவு வைரவர் மடையுடன் நிறைவு பெற திருவருள் கூடியுள்ளது. அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்குகொண்டு, தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### 20-07-2018 முதல் 13-08-2018 வரை பூசை நேரம்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08:00 | சங்கல்பம் | மாலை | 05:15 | சாயரட்சைப் பூசை |
| காலை | 08:15 | அபிஷேகம் | மாலை | 05:45 | ஸ்தம்ப பூசை |
| காலை | 10:45 | ஸ்தம்ப பூசை | மாலை | 06:15 | கலாசார நிகழ்வு |
| காலை | 11:30 | வசந்தமண்டப பூசை | இரவு | 07:00 | வசந்தமண்டபப் பூசை |
| பகல் | 12:45 | மகா பிரசாதம் | இரவு | 10:30 | அர்த்தசாம பூசை |



### மகோற்சவ நிகழ்வுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20/07/2018 | வெள்ளி | கொடியேற்ற அருட்காட்சி காலை 9.30 மணி | 03/08/2018 | வெள்ளி | கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி |
| 21/07/2018 | சனி | இராஜ இராஜேஸ்வரி அருட்காட்சி | 04/08/2018 | சனி | வசந்தோற்சவ அருட்காட்சி |
| 22/07/2018 | ஞாயிறு | கனகதாரா இலட்சுமி அருட்காட்சி | 05/08/2018 | ஞாயிறு | பஞ்சாலுக்கிரக அருட்காட்சி |
| 23/07/2018 | திங்கள் | நாகபூசணி அம்பாள் அருட்காட்சி | 06/08/2018 | திங்கள் | சந்தான பாக்கிய லட்சுமி அருட்காட்சி |
| 24/07/2018 | செவ்வாய் | மீனாட்சி அம்பாள் அருட்காட்சி | | | (தங்கரதப் பவனி) |
| 25/07/2018 | புதன் | சரஸ்வதி வித்யா அருட்காட்சி | 07/08/2018 | செவ்வாய் | ஜோதி மங்கள அருட்காட்சி |
| 26/07/2018 | வியாழன் | அர்த்தநாரீஸ்வர அருட்காட்சி | 08/08/2018 | புதன் | ஓம்காரரூப தர்சன அருட்காட்சி |
| 27/07/2018 | வெள்ளி | கைலாச தரிசன அருட்காட்சி | 09/08/2018 | வியாழன் | மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி |
| 28/07/2018 | சனி | அன்னபூரணாம்பிகை அருட்காட்சி | 10/08/2018 | வெள்ளி | வேட்டைத் திருவிழா |
| 29/07/2018 | ஞாயிறு | அபிராமி தரிசன அருட்காட்சி | 11/08/2018 | சனி | சகோபுர தர்சன அருட்காட்சி (சப்பரம்) |
| 30/07/2018 | திங்கள் | சௌபாக்கிய அம்பிகை அருட்காட்சி | 12/08/2018 | ஞாயிறு | இரதோற்சவ அருட்காட்சி (தேர்)காலை10.00மணி |
| 31/07/2018 | செவ்வாய் | காமாட்சி அம்பாள் அருட்காட்சி | 13/08/2018 | திங்கள் | தீர்த்த உற்சவம், அருட்காட்சி |
| 01/08/2018 | புதன் | அனந்தசயன அருட்காட்சி | 14/08/2018 | செவ்வாய் | பூங்காவன அருட்காட்சி, திருவூஞ்சல் |
| 02/08/2018 | வியாழன் | புஸ்பக விமான அருட்காட்சி | 15/08/2018 | புதன் | வைரவர் மடை |

மகோற்சவ குரு:

"சிவஞானசம்பந்தன்" "சிவாகம விசாரதா" சிவ ஸ்ரீ தியா - உமாசுதக்குருக்கள் BA Hons MA சைவசித்தாந்தம்

**பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக. அனைவரும் வருக. அன்னையின் அருள் பெறுக.**

அன்னையின் சேவையில்

**விழா உபயகாரர்களுடன், ஆலய நிர்வாக சபை, அறங்காவலர் சபை**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஓகஸ்டு (10-08-2018) தொடக்கம் நவம்பர் (10-11-2018) வரை**

| | | |
|---|---|---|
| 10.08.2018 | வெள்ளி | ஆடி அமாவாசை |
| 16.08.2018 | வியாழன் | சுந்தரர் குருபூசை |
| 12.09.2018 | புதன் | ஆவணிச் சதுர்த்தி |
| 23.09.2018 | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் |
| 09.10.2018 | செவ்வாய் | நவராத்திரி ஆரம்பம் |
| 17.10.2018 | புதன் | சரஸ்வதி பூசை |
| 18.10.2018 | வியாழன் | விஜயதசமி |
| 18.10.2018 | வியாழன் | கேதாரகௌரி விரதாரம்பம் |
| 07-11-2018 | புதன் | கேதாரகௌரி விரதப் பூர்த்தி |
| 08.11.2018 | வியாழன் | கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| 13.11.2018 | செவ்வாய் | கந்தஷஷ்டி விரதம், சூரசங்காரம் |
| 22.11.2018 | வியாழன் | திருக்கார்த்திகை |
| 14.11.2018 | புதன் | கும்பாபிஷேகம் |

ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## Membership Form

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam UK and enclose herewith cash/ cheque / Standing Order for £ .................
Members are entitled to receive our information emails and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

giftaid it

*Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.*

*By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.*

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Banked Date | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# சைவ முன்னேற்றச் சங்கம்
# ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலய "கர்ப்ப நியாஸம்"

திருமதி ச சந்திரகோபால்

**கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி**
**அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்**
**சிற்பரவி யோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று**
**பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி**
**சேக்கிழார் பெரியபுராணம்**

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது" என்பது ஆன்றோர் வாக்கு. கோயில் ஆலயம் என்றும் குறிப்பிடப்படும். இறைவனின் உறைவிடமே ஆலயம். பரம்பொருளின் அருளும் சத்தியினையும் நித்தியத்துவத்தினையும் வாழையடி வாழையாக வரும் மானுடர்களுக்கு உணர்த்துவதற்கு ஆலயங்கள் இன்றியமையாதவை. கோயில்களில் வீற்றிருக்கும் கலையம்சம் மிக்க சிற்ப மூர்த்திகள், ஒளிமயமான, மறைபொருளான இறைவனை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஓர் ஆலயம் நிர்மாணம் அல்லது புனர்நிர்மாணம் செய்யப்படும் வேளைகளில் அதற்கான பெரும் பொறுப்பு ஆலயச் சிவாசாரியாருக்கும் சிற்பாசாரியாருக்கும் உள்ளதென்பதை ஆகமங்கள் கூறுகின்றன. அருள் தரும் மூர்த்திகளைச் சிற்ப வடிவில் சிற்பாசாரியாரும் சிவாகம கிரியைகள் மூலம் பரம்பொருளை அடியார்கள் முன் மானசீகமாக நிறுத்தும் பணியில் சிவாசாரியாரும் இணைந்து செயல்படுவது மரபு. திருக்கோயில் நிர்மாண, புனர் நிர்மாணப் பணியில் ஐந்து முக்கிய கிரியைகள் உள்ளன. அதில் ஒன்று கர்ப்ப நியாஸம்.

கடந்த 04-06-2018இல், சைவ முன்னேற்றச் சங்கம் (ஐ.இ), அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயக் கட்டடத் திருப்பணியின் மூன்றாவது நிலையில் உள்ள முக்கிய இறை அம்சமான கர்ப்ப நியாஸம் (கருப்பேழை பதித்தல்) கிரியைகள் மிகக் கோலாகலமாக நடந்தேறின. கோயிற் கட்டடத்தில் அதிஷ்டானத்தின் மேல் மட்டத்தில், சுவர் அகலத்தில் கலை நூலோர் விதித்துக் கொடுத்த அளவில் குழி அமைத்து, சம அளவுடைய ஒன்பது அறைகள் (பிரிவு) கொண்ட மூடியுடனான உலோகத்தாலான பேழைக்குள், உரிய பொருள்களை நிரப்பிப் பெட்டியை மூடி முறைப்படி பூசித்த பின்பு, அக்குழிக்குள் பேழையை வைப்பது "கர்ப்ப நியாஸம்" என்றும் பேழை வைக்கப்படும் குழி "கர்ப்பம்" என்றும் வேதாகமங்கள் கூறுகின்றன.

இக் கர்ப்பப் பேழைக்குள், தகட்டில் பதிக்கப்பட்ட ஒன்பது ஒலி எழுத்துக்கள் ஒன்பது மண் வகைகள், ஒன்பது கிழங்கு வகைகள், ஒன்பது தரம் மிக்க விதை தானியங்கள், ஒன்பது மூலிகை வகைகள், ஒன்பது இரத்தினக் கல் மணி வகைகள், ஒன்பது வகைத் தாதுப் பொருள்கள், ஒன்பது உலோக வகைகள், ஒன்பது நறுமணப் பொருள்கள் (பரிமள திரவியம்), ஒன்பது அஸ்திர-ஆயுத வகைகள், ஒன்பது வகை உருவ உலோகத் தகடுகள் ஆகிய அத்தனை பொருள்களும் பேழை அறைகளுக்குள் வைத்து மூடத்தக்கவாறு சிறிய அளவில் வைக்கப்படும்.

இப்பேழைக்குள் வைக்கப்படும் ஒன்பது வகை இரத்தினக் கற்கள் ஒளிச் சக்திகள் என்றும் ஒன்பது வகை உலோகங்கள் உடல் சக்திகள் என்றும், ஒன்பது வகை தாதுப் பொருள்கள் வீர உயிர்ச்

சக்திகள் என்றும், ஒன்பது வகை மூலிகைகள் தீமை எதிர்ப்புச் சக்திகள் என்றும், ஒன்பது வகை தானியங்கள் கவர்ச்சி, வசீகர சக்தி கொண்டவை என்றும் சைவாகமங்கள் கூறுகின்றன. இவ்வரிய பொருள்களைத் தன்னுள் அடக்கிய பேழையைக் கருவாகத் தனக்குள் கொண்டு, கர்ப்பவதியாக, சர்வசக்தியாக உயிர்த்து நிற்கும் கட்டடமான திருக்கோயில் தெய்வ சக்தி, நீண்ட ஆயுள், ஜனவசீகரத்துடன் உயிர்ப்புடன் வாழும் என்பது ஐதீகம்.

இக் கர்ப்ப நியாஸ கிரியைகளுக்கான கருப் பேழையை உரிய முறையில், குறிப்பிட்ட காலத்தில், ஆகம விதிகளில் இருந்து சிறிதேனும் வழுவாது, தயார் படுத்துவதற்காகக் காலநேரம் பாராது கடுமையாக உழைத்த, சைவ முன்னேற்றச் சங்கம் பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ ரமேஷ் குருக்கள் அவர்களது திருப்பணி அளப்பரியது. அதே வேளையில் ஆலய சிற்பாசாரியார், திரு.ஜெயகாந்தன் அவர்களது பெருஞ் சேவையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இக் கிரியை வழிபாடுகளில் இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ கயிலை நாகநாத சிவம் குருக்கள், இலண்டன் என்பீல்ட் நாக பூஷணி அம்பாள் பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ கமலநாதக் குருக்கள் ஆகியோருடன் சிவஸ்ரீ சங்கரக் குருக்கள், சிவஸ்ரீ கணேஷ்குருக்கள், சிவஸ்ரீ மோகன் சிவாசாரியார், சிவஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள், சிவஸ்ரீ சரவணன் குருக்கள் என அனைத்துச் சிவாசாரியார்களும் ஒருங்கிணைந்து வேத மந்திரங்களை ஓதிப் பூசித்தமை கண் கொள்ளாக் காட்சியாக அமைந்தது. காலை எட்டு மணி முதல் ஆலயத்தில் நிறைவாகக் கூடி இருந்த பக்தப் பெருமக்கள் புஷ்பம், பழம், தேங்காய், நெய், தேன் என மங்கலப் பொருள்களைத் தட்டுகளிலேந்தியபடி கிரியை வழிபாடுகளில் ஈடுபட்டு சிதம்பரேஸ்வரர் அருள்வேண்டி நின்றனர்.

ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ ரமேஷ் குருக்கள், ஆலய அறங்காவலர்கள், ஆட்சிக்குழு தலைவர், உறுப்பினர்கள், சங்க அங்கத்தவர்கள், சிற்பாசாரியார், பக்த கோடிகள் அனைவருமே வேண்டி நிற்கும், ஆலய புனருத்தாரண பணிகள் நிறைவு பெற்று, குறித்தபடி ஐப்பசி மாதத்தில் “மஹா கும்பாபிஷேகம்” நடந்தேற, ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் அருள்பாலிப்பார் என்பதில் ஐயமேதுமில்லை.



# கண்ணனும் தாத்தாவும்

- முத்து



கண்ணன் தமிழ்ப் பள்ளி முடிந்து வீட்டுக்கு வருகிறான். கண்ணன் வருவதைக் கண்டதும் தாத்தா கதவைத் திறக்கிறார்.

கண்ணன்: என்ன தாத்தா! நான் அழைப்பு மணியை அடிக்குமுன்னமே கதவைத் திறந்துவிட்டீர்களே!

தாத்தா: கண்ணா! நீ எத்தனை மணிக்கு வருவாய் என்று எனக்குத் தெரியுந்தானே!

கண்ணன்: ஆனாலும் நான் சரியாகக் கதவுக்குக் கிட்ட வந்தது எப்படி உங்களுக்குத் தெரியும்? தாத்தா!

தாத்தா: இன்று நீ வரக் கொஞ்சம் பிந்திப்போச்சு. அதனாலே நான் வெளியே எட்டிப் பார்த்தேன். நீ தூரத்தில் ஓடி வருவது தெரிந்தது. நான் கதவுக்குப் பின்னால் நின்றேன். உனது காலடிச் சத்தம் கேட்டதும் கதவைத் திறந்தேன். அவ்வளவுதான் கண்ணா.

கண்ணன்: அதுதானே! நீங்கள் கள்ளமாகக் கதவுக்குப் பின்னால் ஒளித்திருந்தீர்கள். அப்படித்தானே!

தாத்தா: சரி, அப்படியே வைத்துக்கொள் கண்ணா! இன்று தமிழ்ப் பள்ளியில் என்ன படித்தாய்? சொல்

கண்ணன்: இன்றைக்குப் பள்ளயில் கட்டுரை எழுதப் பழகினோம். நான் இனி எழுத நீங்கள்தான் உதவி செய்யவேண்டும்.

தாத்தா: அதற்கென்ன கண்ணா! கரும்பு தின்னக் கைக்கூலி வேணுமா?

கண்ணன்: அப்படியென்றால் என்ன கருத்து? எனக்கு விளங்கவில்லை தாத்தா.

தாத்தா: கரும்பு சாப்பிட எப்படி இருக்கும்?

கண்ணன்: நல்ல இனிப்பாக இருக்கும் தாத்தா!

தாத்தா: கரும்பு சாப்பிட உனக்கு விருப்பந்தானே!

கண்ணன்: இது என்ன கேள்வி தாத்தா! கரும்பை விரும்பாதவர்கள் இந்த உலகத்தில் யாராவது இருப்பார்களா?

தாத்தா: நீ கேட்ட கேள்விக்கு நீயே பதில் சொல்லிவிட்டாய் கண்ணா!

கண்ணன்: அதெப்படி? தாத்தா!

தாத்தா: கரும்பை எல்லோரும் விரும்புவார்கள் என்று உனக்குத் தெரியும். கைக்கூலி என்றால்தான் உனக்கு விளங்கவில்லை. யாராவது எங்கள் வீட்டிலோ தொட்டத்திலோ வந்து வேலை செய்தால் அவர்களுக்கு வேலை செய்து முடியக் காசு கொடுக்கவேணும். அதுதான் கூலி. வேலை செய்து முடியக் கையில் கொடுப்போம். அதனைக் கைக்கூலி என்று சொல்வது வழக்கம்.

கண்ணன்: இப்போது விளங்கிவிட்து தாத்தா. கரும்பு தின்பதற்கு ஒருவரும் காசு கேட்கமாட்டார்கள்.

தாத்தா: அதுபோலத்தான் உனக்கு ஏதாவது சொல்லித் தருவதென்றால் எனக்குக் கரும்பு தின்பதைப்போல சந்தோஷம.

கண்ணன்: ஓ...!! அப்படியா தாத்தா?

(கண்ணன் தாத்தாவை இறுகக் கட்டிப்பிடித்துக் கொஞ்சுகிறான். தாத்தாவுக்கு கண்களில் ஆனந்தக் கண்ணீர்)

தாத்தா: உலகத்திலுள்ள எல்லாத் தாத்தா பாட்டிக்கும் தங்கள் பேரக் குழந்தைகள்மேல் அளவற்ற பாசம் கண்ணா.

கண்ணன்: ஆனால், எல்லோரும் உங்களைப்போல இருக்கமாட்டார்களென்று நினைக்கிறேன் தாத்தா!

தாத்தா: இல்லைக் கண்ணா! அவர்களின் அன்பும் அக்கறையும் வேறுமாதிரி இருக்கலாம். சிலர் தங்கள் பேரப்பிள்ளைகள் ஆசைப்படுகிறார்களே என்று நிறையச் சொக்கலேட் வாங்கிக் கொடுப்பார்கள். சிலர் விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பர். சின்னப்பிள்ளைகள்தானே என்று என்ன குழப்படி செய்தாலும் இரசித்துச் சந்தோஷப்படுவார்கள். சிலபேர் அவர்கள் மிகுந்த கெட்டிக்காராக நல்ல பிள்ளைகளாக வளரவேண்டுமென்று கண்டிப்பாக இருப்பார்கள். ஆனால் எல்லோர் மனத்திலும் நிறை அன்பு இருக்கும் கண்ணா!

கண்ணன்: ஓம் தாத்தா. என் நண்பன் கார்த்திக்கு அவன் தாத்தா பாட்டியைப் பிடிக்காது அவனை விளையாடவோ டெலிவிஷன் பார்க்கவோ விடமாட்டார்களாம்.

தாத்தா: கார்த்திக்கின் தாத்தா அவனை நன்றாகப் படிக்கவைக்கப் பாடுபடுகிறார் கண்ணா. அது சரி நீ ஓடிப்போய் சாப்பிட்டுவிட்டு வா பிறகு ஆறுதலாகக் கட்டுரை பற்றிக் கதைப்போம்.

கண்ணன்: அது பெரிய கட்டுரை தாத்தா. நீங்கள் சிறுவனாக இருந்தபோது எப்படி வாழ்ந்தீர்கள், என்ன விதமான சாப்பாடு சாப்பிட்டீர்கள், எப்படியான பொழுதுபோக்கு இருந்தது, இங்கே நான் எப்படி வாழ்கிறேன், எப்படி எல்லாம் மாறியுள்ளது என்று எழுதவேண்டும்

தாத்தா: ரொம்பவும் வித்தியாசம் கண்ணா! நீ கேட்டால் அதிசயப்படுவாய், நம்பவே மாட்டாய் கண்ணா! உன் அப்பாவுக்கே தெரியுமோ என்னவோ சந்தேகந்தான்.

கண்ணன்: அப்போ தாத்தா பாட்டி இல்லாதவர்கள் எப்படி இந்தக் கட்டுரையை எழுத முடியும்?

தாத்தா: அது நல்ல கேள்வி கண்ணா! அவர்களின் அம்மா, அப்பா தெரிந்தால் சொல்லிக் கொடுப்பார்கள். அல்லது வயதான சொந்தக்காரரிடம் கேட்டறிந்து சொல்லிக் கொடுப்பார்கள். அங்கே பார்! பாட்டி உனக்காகச் சாப்பாட்டை வைத்துக்கொண்டு காத்திருக்கிறா.

கண்ணன்: சரி தாத்தா, பாட்டி! இதோ வந்துவிட்டேன் (கண்ணன் பாட்டியைக் கட்டியணைத்து முத்தம் கொடுக்கிறான்)

பாட்டி: கையைக் கழுவிவிட்டு ஓடிவா கண்ணா! சாப்பாடு ஆறிவிடப்போகிறது

கண்ணன்: ஓ கே பாட்டி இதோ ஒரு நிமிடத்தில் வருகிறேன். (பாட்டி கண்ணனுக்குப் பிடித்த கறிகளைச் சோற்றுடன் சேர்த்துக் குழைத்து சிறு உருண்டைகளாக உருட்டித் தட்டில் வைக்கிறார். கண்ணன் ஓடிவந்து பாட்டிக்குப் பக்கத்தில் இருந்து ஒவ்வொரு உருண்டையாக எடுத்து இரசித்துச் சாப்பிடுகிறான். (கண்ணனுக்குச் சிரிப்பாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது)

கண்ணன்: என்ன பாட்டி இது? புதுவிதமாக இன்று சாப்பாடு தருகிறீர்கள்.

பாட்டி: தமிழ்ப் பள்ளியால் வந்தவுடன் நீ தாத்தாவிடம் அவர் சின்னப் பிள்ளையாக இருந்தபோது எப்படி வாழ்ந்தாரென்று கேட்டாய். அது எனக்கும் கேட்டது. அதுதான் நான் சின்னப்பிள்ளையாக இருந்தபோது என் அம்மா எனக்கும் அக்கா தம்பி தங்கைக்கும் சோறு குழைத்துத் தருவது ஞாபகம் வந்தது. அவ இப்படித்தான் சோற்றைக் குழைத்து எங்கள் கையில் தருவா. நாங்கள் எல்லோரும் வட்டமாக இருந்து சந்தோஷமாக போட்டி போட்டுச் சாப்பிடுவோம்.

கண்ணன்: அதையெல்லாம் இப்பவும் ஞாபகம் வைத்திருக்கிறீர்களா பாட்டி?

பாட்டி: ஆமடா கண்ணா! சின்ன வயதில் நடந்தவை எல்லாம் எப்போதும் நினைவில் இருக்கும். வளர்ந்து வயதுபோன காலத்தில் நடப்பவை அதிகம் நினைவிருக்காது.

கண்ணன்: அது ஏன் பாட்டி? வளர்ந்து வரும்போது நிறையச் சம்பவங்கள் நடக்குமே! அது ஏன் நினைவிருக்காது?

பாட்டி: சிறியவர்களாக இருக்கும்போது விளையாடுவது சாப்பிடுவது கொஞ்சநேரம்

படிப்பது மட்டுந்தானே கண்ணா! வயது போக, படிப்புடம் அதிகமாகும் பிறகு வேலை பார்ப்பது, நிறையப் பொறுப்புக்கள், பிரசினைகள் இப்படிப் பலதும் இருக்கும்

கண்ணன்: அப்போது எதுவும் நினைவில் இருக்காதோ பாட்டி?

பாட்டி: இல்லை கண்ணா! முக்கியமான விஷயங்கள் ஞாபகமிருக்கும் அதை நீ வளர வளரத்தான் தெரிந்துகொள்வாய்.

கண்ணன்: வேறு என்ன உங்களுக்கு ஞாபகம் இருக்கு பாட்டி?

பாட்டி: அம்மா அப்பா சொல்லித்தந்த அறிவுரைகள் எல்லாமே ஞாபகம் இருக்கிறது. சில விஷயங்களில் அவர்கள் மிகவும் கண்டிப்பாக இருப்பார்கள்.

கண்ணன்: அதைச் சொல்லுங்களேன் பாட்டி!

பாட்டி: எல்லாவற்றையும் ஒரே நாளிலே சொல்ல முடியுமா கண்ணா! காலையும் மாலையும் தேவாரம் பாடிச் சுவாமி கும்பிடவேண்டும்.

கண்ணன்: அதை மறக்காமல் இப்பவும் செய்கிறீர்களே பாட்டி. வேறென்ன பாட்டி?

பாட்டி: பொய் சொல்லக் கூடாது, புறஞ்சொல்லக் கூடாது.

கண்ணன்: புறஞ்சொல்லக்கூடாது என்றால் என்ன பாட்டி,?

பாட்டி: ஒருவர் வீட்டுக்கு வந்து போனபின்பு அல்லது எங்காவது பார்த்துப் பேசியபின்பு அவர்களைப்பற்றிக் குறை சொல்லக்கூடாது. ஒருவரைப்பற்றி அவர்கள் இல்லாத இடத்தில் தப்பாகப் பேசுவதுதான் புறஞ்சொல்லல்.

கண்ணன்: தப்புச் செய்தால் அதைத் தப்பு என்று சொல்வதில் தவறில்லையே பாட்டி!

பாட்டி: அதை அவர்களுக்கு நேரில் சொல்லாம். அதனால் அவர்கள் திருந்தலாம். அதுதான் சரி கண்ணணா. நீ தாத்தாவிடம் கேட்டால் அவர் இன்னும் நன்றாக விளங்கப்படுத்துவார்.

கண்ணன்: சரி பாட்டி தாத்தாவிடம் இப்போதே கேட்கிறேன்.

பாட்டி: சரியடா கண்ணா! தாத்தவுக்கும் உனக்கும் வேறு என்ன வேலை இருக்கிறது? எனக்கோ சமயலறையில் நிறைய வேலை இருக்கிறது.

கண்ணன்: இரவுக்கு என்ன சாப்பாடு செய்கிறீர்கள் பாட்டி?

பாட்டி: எல்லாம் உனக்குப் பிடித்த பூரியும் கிழங்குந்தான்

கண்ணன்: ஹை! அதுதான் வீட்டிலே எல்லோருக்கும் பிடித்த சாப்பாடு

(கண்ணன் தனக்காகக் காத்திருக்கும் தாத்தாவிடம் ஓடுகிறான்)

# ஐயம் தெளிவோம்

## தொகுப்பு: சிவனருட்செல்வர்

கோட்புலி நாயனார் இறைவனுக்கு வைத்த நெல்லை உண்டதற்காகப் பச்சிளம் குழந்தையையும் கொன்றது சரிதானா?

சிறுத்தொண்ட நாயனார் பிள்ளைக்கறி சமைத்தது நியாயம்தானா?

இயற்பகை நாயனாரிடம் அவர்தம் துணைவியாரை இறையடியார் வேண்டியதும், அவர் தந்ததும் சரிதானா?

சண்டீசர் பதம் பெற்ற விசாரசருமர், தம் தந்தையின் கால்களை வெட்டியது முறைதானா?

ஒருவர் குற்றம் செய்தால், அக்குற்றத்திற்கு உடந்தையாகவோ, அதில் பங்குகொண்டோ இருப்பவர்களும் குற்றவாளிகள்தாம்.

நாம் ஏறிச் செல்லும் மகிழ்வுந்து ஓட்டுநர் வேறு ஆளாக இருக்கலாம். அவர் ஒருவர்மேல் வண்டியை ஏற்றிப் பெருங்குற்றத்தை இழைத்துவிட்டால், ஓட்டுபவர் மட்டுமே அதற்குப் பொறுப்பு; நமக்கதில் தொடர்பு இல்லை என்று சொல்ல முடியாது. வண்டிக்குச் சொந்தக்காரராகிய நாமும் அக்குற்றத்திற்கு ஓரளவு பொறுப்பாளிகள் ஆவோம்.

இன்றைய சட்டம் கூட இதனை ஏற்றுக்கொண்டு Vicarious Liablity என இதற்குப் பெயரும் இட்டுள்ளது. இதனை நன்கு அறிந்தவர் சேக்கிழார்.

குற்றம் செய்த யானையை வெட்டி வீழ்த்திய எறிபத்தர் கடமையிலிருந்து தவறிய யானைப் பாகனையும், அதனை வழி நடத்திச் செல்ல வேண்டிய கடமை தவறிய ஆட்களையும் கொன்று விடுகிறார். இதனை அறிந்த அரசன், அவர்களைப் பணிக்கு அமர்த்திய தவறு தன்னுடையது; ஆதலால் தானும் அதற்குப் பொறுப்பு என்று கூறித் தம்மையும் கொல்லுமாறு வாளை நீட்டுவது எறிபத்த நாயனார் வரலாற்றில் சேக்கிழாரால் சொல்லப்பட்டிருக்கக் காணுகின்றோம்.

ஆகவே, இறைவனுக்கு என்று நெல்லை வைத்து அதனைத் தொடுபவர் பெருங்குற்றத்திற்கு ஆளாவர் என்று ஊரறிய "விரையாக்கலி" என்று மக்களுக்கு அறிவித்த கோட்புலியார் அந்த நெல்லை உண்ட தாயை வெட்டியது சரியே. அவள் பாலை உண்ட குழந்தையும் vicarious liability-யின்படி அக்குற்றத்திற்கு ஆளாகிறது.

மனிதாபிமானம் என்ற அடிப்படையில் அடியார்கள் வாழ்க்கையில் விளக்கம் காண முற்படுவது சரியன்று. சராசரி மனிதர்களிடமிருந்து பல மடங்கு உயர்ந்து நிற்கின்ற இந்த நாயன்மார்கள், கொள்கை என்ற ஒன்றை எடுத்துக்கொண்டால் ஒரு நாளும் அதனை விடமாட்டார்கள். நாம் அவர்கள் நிலையிலிருந்து அவர்கள் செயலை ஆராய வேண்டுமே தவிர, நம்முடைய நிலைக்கு அவர்களை இழுத்து வந்து ஆராய்வது சரியன்று.

தனி ஒருவனைக் கொல்வது கொலைக் குற்றம். நாட்டைக் காப்பதற்காகக் கடமை பூண்டு தன்னை ஒத்த மனிதர்களைப் பகைவர் என்று பெயரிட்டுக் கொலை புரிவது வீரம் என்று பேசப்படுகின்றது; அதற்கு விருதும் வழங்கப்படுகின்றது. ஆயினும் கொலை, கொலைதானே! அப்படியிருக்க ,இந்த இரண்டு கொலைகளையும், வேறுபடுத்தி ஒன்றுக்கு மரண தண்டனையும், மற்றொன்றிற்கு விருதும் வழங்குவது எப்படிச் சரியாகும்? இதைப் புரிந்துகொண்டால், கோட்புலியார் செயலையும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

அடுத்தபடியாக, சிறுத்தொண்டர் தம்பிள்ளையைக் கறிசமைத்தது சரியா என்ற வினாவைப் பார்ப்போம்.
கொள்கை அல்லது கடமை என்ற ஒன்றிற்காகத் தம் பிள்ளையைக் கறிசமைக்கும் சோதனை யாருக்கு ஏற்பட்டது? நம்மைப் போன்ற சாதாரண மனிதருக்கு அன்று. பல்லவ மன்னனுக்குச் சேனாதிபதியாக இருந்தவர் பரஞ்சோதி. இவர் சாளுக்கியனை எதிர்த்து அவனுடைய தலை நகராகிய வாதாபி வரை சென்று ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்தார் அல்லவா! தாய்நாட்டைக் காக்கும் கடமை காரணமாக இதனைப் பரஞ்சோதி செய்தார். பல்லவ மன்னனும் அவர் செயலைப் போற்றிப் பரிசளித்து ஒய்வு தந்தார். நாட்டைக் காத்தல் என்ற கடமைக்காக முன்பின் தெரியாதவர்களை வெட்டி வீழ்த்துவது சரி என்று அவரும் கருதினார். உலகமும் அதனை ஏற்றுக்கொண்டது.

அடியார்கள் எது கேட்டாலும் அப்பொருள் தம்பால் இருப்பின், அதனை மறுக்காமல் கொடுப்பது தம் கடமை; தம் கொள்கை என்ற முடிவில் வாழ்ந்தவர் பரஞ்சோதியார். எனவே நாட்டுப்பற்று என்ற கொள்கைக்காகப் பிறரைப் பலியிடுவது போல், தம் கொள்கையைக் காப்பாற்றுவதற்காகத் தம் மகனை அவர் பலியிடத் தயாராக இருப்பாரா என்பதுதான் வினா. பரஞ்சோதியார் என்ற தனி மனிதருக்கு, அவர் கொண்ட கொள்கைக்கு ஏற்பட்ட சோதனையாகும் இது. அந்தச் சூழ்நிலையில் அவர் செய்த செயலைச் சராசரி மனிதர்கள் ஆகிய நாம், நம்முடைய சிறிய அளவு கோலைக் கொண்டு அளவிடுவது சரியாகாது.

அதனால்தான் நாயன்மார்களை சராசரி மனிதரிலிருந்து மிக உயர்ந்து நிற்கும் அடியார்கள் - வீரர்கள் என்று சேக்கிழாரே போற்றுகிறார்.

அகங்காரம், மமகாரமாகிய இரண்டையும் அறவே போக்கினால்தான் அடியாராக ஆக முடியும். இவை இரண்டும் போன பிறகு மகன் என்றும், மனைவி என்றும் உறவு கொண்டாடக் கூடியவர்கள் நாயன்மார்களாக இருக்க இயலாது. நான் என்ற அகங்காரமும், எனது என்ற மமகாரமும் போன பிறகு, என் மனைவி, என் பிள்ளை என்று நாயன்மார்கள் எண்ண மாட்டார்கள். எனவே அகங்கார, மமகாரம் அற்ற இவர்கள் செயலை, இவை இரண்டின் வடிவமாக வாழுகின்ற நாம் அளவிட முற்படுவதும், ஆராய்வதும் பொருத்த மற்றதாகும்.

அகங்கார, மமகாரம் அற்றவர்கள்தாம் நாயன்மார்கள். அத்தகைய நாயன்மாராக இயற்பகையாரை நம் கண்முன் நாம் காணவேண்டும். தூர்த்த வேடத்தில் வந்த ஒருவர், “உன் காதல் மனைவியை வேண்டி வந்தனம்” என்று எதிரே சொன்ன போதிலும் இயற்பகையாருக்கு எவ்வித உணர்ச்சி வேறுபாடும் தோன்றியதாகத் தெரியவில்லை.

“இது நமக்கு முன்பு உள்ளது” என்று கூறுகின்ற அளவிற்கு வளர்ந்து நிற்கின்றார் இயற்பகையார். “உன் மனைவியை வேண்டி வந்தனம்” என்ற சொல் அவரைப் பொறுத்தமட்டில் எவ்வித உணர்ச்சியையும் ஏற்படுத்தாமல் “இது நமக்கு முன்பு உள்ளது” என்று அவர் பேசுகிறார் என்றால் நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மமகாரத்தின் முழு வடிவமாக இருப்பவள் மனைவி. ஆனால் இயற்பகையாரைப் பொறுத்த மட்டில் அந்த மனைவி அவருடைய வீட்டிலுள்ள குடம், தவலை, நாற்காலி, கைக்குடை என்பவை போலவே கருதப்படும் பொருளாக ஆகிவிட்டது. அதனால்தான் “இது நமக்கு முன்பு உள்ளது” என்று பேசுகிறார்.

அடுத்த வீட்டுக்காரர் நம்முடைய குடையைச் சற்று இரவல் கேட்டால், எவ்வித மனக்கிலேசமும் இல்லாமல் "இதோ இருக்கிறது, எடுத்துப் போங்கள்" என்று சொல்லுவதைப் போல இயற்பகையார் விடை இறுக்கிறார்.

நம்போன்ற சாதாரணமான மக்களைப் பொறுத்த மட்டில் மனைவிக்கும், குடைக்கும் வேறுபாடு உண்டு. இரண்டும் மமகாரத்தின் விளைவுதான் என்றாலும் மனைவி உயிரோடு கூடிய பொருளாகவும், குடை தேவைப்படும் பொழுது பயன்படக்கூடிய பொருளாகவும் வேறுபட்ட நிலையில் உள்ளன.

நாமே மயக்கமுற்றுள்ள நிலையில் இருக்கும்பொழுது பக்கத்தில் உள்ளவர்கள் "கண்ணைத் திறந்து பாருங்கள். உங்கள் மனைவி வந்திருக்கிறாள். உங்கள் மகன் வந்திருக்கிறான்" என்று சொல்லும் பொழுது, Deep Coma போன்ற ஆழந்த மயக்கத்தில் உள்ளபொழுது, எவ்வித வேறுபாட்டையும் தோற்றுவிப்பதில்லை.

மமகாரத்தை அறவே ஒழித்த இயற்பகையார், அடியார்கள் விரும்பியதைக் கொடுப்பதுதான் தம் பிறப்பின் பயன் என்ற முடிவில் உறுதியாக நிற்கின்றார். எனவே "இது என்னிடத்தில் ஏற்கனவே உள்ளது. எடுத்துப் போகலாம்" என்கிறார். அகங்கார, மமகாரங்களை அறவே ஒழித்து இறைவுணர்வில் ஆழ்ந்து நிற்கின்றவர்கள் செய்கின்ற செயலை, அவர்களுடைய அளவு கோலைக் கொண்டு அளக்க வேண்டுமே தவிர, நம்முடைய அளவு கோலில் அளப்பது சரியன்று.

லிட்டரும், மீட்டரும் அளவுக் கருவிகள்தான். பாலை லிட்டரில் அளக்க வேண்டும்; துணியை மீட்டரில் அளக்க வேண்டும். லிட்டர் அளவுக் கருவி இல்லாத பொழுது, மீட்டரும் அளவுக் கருவிதானே என்று கூறிக் கொண்டு, பாலை மீட்டரில் அளக்க முற்படுவது சரியான செயல் ஆகாது.

ஆகவே அடியார்கள் செயலை அவர்களின் அளவுகோலைக் கொண்டுதான் அளக்க வேண்டும். சண்டேசுரர் என்று பின்னர்ப் பெயர் பெற்ற விசாரசருமர், சிவபூஜையில் ஈடுபட்டிருந்தார். பால் குடத்தில் அபிடேகத்திற்குரிய பால் வைக்கப்பட்டிருந்தது. பால் ஒன்றுதான். ஆனால், காப்பி போடுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் பாலை நாம் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். அதையே இறைவனின் அபிடேகத்திற்கு உரியது என்று குறிக்கப்பட்டு ஒரு பாத்திரத்தில் வைத்துவிட்டால் அதன் தன்மையே வேறு.

அரசு ஊழியர்களுக்கு இது நன்கு தெரியும். ஒரு குறிப்பிட்ட செயலுக்கு என்று பணத்தை ஒதுக்கி வைத்து விட்டால் (Earmarked Fund) எக்காரணத்தைக் கொண்டும் அதை மற்றொரு துறைக்குப் பயன்படுத்தக் கூடாது. இதே நிலைமைதான் விசாரசருமர் வரலாற்றில் நிகழ்கின்றது. அவர் குடிப்பதற்கென்று பாலை வைத்திருந்து அதை ஒருவர் காலால் இடறிவிட்டால் உலகம் ஒன்றும் நின்றுவிடாது. ஆனால், இறைவனின் அபிடேகத்திற்கு என்று குறிக்கப்பட்ட பொழுது அந்தப் பால் தனிப் பெருமை பெற்று விடுகின்றது.

விசாரசருமரின் தந்தை வைதிகன். ஆதலால் சிவலிங்கத்தையோ, அபிடேகத்தையோ, சிவபூசையையோ அவன் நம்பாதவன், ஏற்றுக் கொள்ளாதவன். ஆகவேதான் அவன் அந்தக் குடத்துப் பாலைக் காலால் இடறினான்.

விசாரசருமர் சிவ அபராதம் நிகழ்ந்துவிட்டதற்காகக் கீழே கிடந்த குச்சியை எடுத்து அவன் காலில் அடித்தார். சிவ அபராதம் ஆதலால், குச்சி கோடாலியாக மாறிற்று. இதில் விசாரசருமர் செய்த

செயல் ஒன்றும் இல்லை. அதைப் புரிந்துகொள்வது எளிது.

நம்முடைய வீட்டில் ஒருவன் பணத்தைத் திருடிவிட்டால் அதற்குரிய தண்டனை வேறு. அரசாங்கப் பணத்தைக் கையாடிவிட்டால் அதற்குரிய தண்டனை வேறு. இரண்டும் பணத்திருட்டுத்தான். ஆனால் ஒன்று தனி மனிதராகிய நம்முடைய பணம். மற்றொன்று அரசின் சொத்தாகிய பொதுப்பணம். எனவேதான் தண்டனை மாறுகிறது.

குடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த குடத்துப் பால் அன்று அபிடேகத்திற்குரிய பால். ஆதலால் பெருந் தண்டனை கிடைத்தது.



# எம் எல் வி ஒரு சகாப்தம்

**(03.07.1928 - 31.10.1990)**

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா என்ற பாட்டைப் பாடாத, வாசிக்காத சங்கீத வித்வான்கள் கருநாடக இசைத்துறையில் இல்லையென்றே சொல்லலாம். ஆனால் அந்தப் பாடல் பாரதியார் பாடல் என்றாலும் மணமகள் என்ற திரைப்படத்தில் சீ ஆர் சுப்பராமன் இசையமைப்பில் எம் எல் வி அவர்களும் வீ என் சுந்தரமும் பாடியது என்றால் தற்கால இசைஞானி, ர.்.மான் இரசிகர்கள் நம்ப மறுப்பார்கள்.

Madras Lalithangi Vasanthakumari என்ற பெயர் சுருக்கமாகி MLV ஆகியது. படித்துப் பட்டம் பெறவே விரும்பிய இவர், போரினால் படிப்புப் பாதிக்கப்பட்டதால் குரு ஜி என் பாலசுப்பிரமணியம் அவர்களிடம் சுமார் 11 ஆண்டு இசையைக் கற்றார். 1941இல் வீ ஆர் எஸ் முதலியார் பெங்களூருவில் இவரின் தாயாருக்கு ஒரு கச்சேரி ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் உடல் நலம் காரணமாகத் தாயாரால் கச்சேரி செய்ய இயலவில்லை. தாய்க்குப் பதிலாக மகள் 13 வயதில் குருவின் பரிந்துரையில் மேடை ஏறினார். அதுவே - தாயுடன் முன்னரே மேடைகளிற் பாடியிருந்தாலும் - இவரின் முதற் கச்சேரி.

புரந்தரதாஸர் கீர்த்தனங்கள் பாடுவதில் இவரை விஞ்ச எவருமில்லை. பிரபல பாடகர்களே இவரிடம் போய் அந்தக் கீர்த்தனைகளைக் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். இராகம், தானம், பல்லவி பாடுவதிலும் தன்னிகரில்லாதவராகத் திகழ்ந்தார் எம் எல் வி அவர்கள்.

மேலே குறிப்பிட்ட சின்னஞ்சிறு கிளியே என்ற பாடல் தவிர, வேறு பல பாடல்களும் திரையில் இவர் குரலாற் பிரபலமடைந்தன. ஸிம்மேந்திரமத்யமம் என்ற இராகத்தில் தொடங்கி கற்பனாஸ்வரத்தில் மோகனம், ஹிந்தோளம், தர்பார் ஆகிய இராகங்கள் இராகமாலிகையாக வரும் 'எல்லாம் இன்பமயம்' என்ற பாடலை பி லீலாவுடன் பாடியுள்ளார்.

திருமதி சுதா ரகுநாதன், திருமதி சாருமதி ராமச்சந்திரன் போன்றோர் இவரின் இசை வாரிசு களில் இருவர். எம் எல் வி இன்று இருந்தால் அவரின் வயது 90.

ஜி என் பி பாணிக்கு ஒரு வாரிசாக விளங்கிய எம் எல் வி இன்று எம்மிடை இல்லை. ஆனால் காலத்தால் அழியாத அவர் இசை இன்னும் வாழ்கிறது; எம் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

# Hinduism in search of Answers........

Compiled by S Atputhananthan

## FESTIVALS

### What are the purposes of Festivals?

The increasing pace and mechanisation of life, robs humans from the leisure time so vitally needed to relax. Tension is created due to this constant running. Presently the diversion is provided by Cinema, Television and other leisure activities, but in the days gone by, fairs and festivals provided the opportunities to pray, mingle, relax, enjoy. Festivals, whether religious or social did not begin all of a sudden. Every festival is an outcome of an important event – mythological or historic. These facilitate intense prayers and relaxation to the mind. Celebration of festivals and sacred days is a common phenomenon found in all religions. The common masses, though they may gain some knowledge through philosophy and wisdom through mythology, are not satisfied at heart unless they can perform some rites and rituals associated with religion. Celebration of festivals and sacred days affords them such opportunities. Performing these will give them peace and joy. At the social level, greater unity and co-operation and a sense of oneness are achieved. Also, festivals help in the dissemination of religion and culture.



On such days one is expected to devote more time for prayer and spiritual pursuits than on other days. Taking part in a feast on such days is actually symbolic of the spiritual feast we are expected to reap. So, observing festivals and sacred days through feasts only, forgetting the spirit and purpose behind them, is only a mockery of religion. This is how a holy day is often reduced to a holiday!

These festivals could be the birthdays of our great spiritual and religious leaders or important milestones in the history of our religion and culture. They could also be occasions

of thanks giving to Mother Nature (like Thai Pongal). Good days in one's own life (like the wedding day) might also be occasions of such rejoicing. However, on all such days, one is expected to observe fasting, self-control, worship of the family deity, honouring the elders and taking their blessings. Taking part in the feast along with relatives and friends, visiting their homes and exchanging presents may follow, but they are not substitutes to austerity and self-discipline.

### What are some of the Festivals/Fasts observed and celebrated?

**Pongal:**

South Indian festival both a 'rite of passage' of the sun marking its entry into Makara and, a harvest festival, the first day of the Tamil month, Thai (January 13/14th). The word pongal means boiling and refers to the fact that the rice boiled with sugar is the essential diet of the day. In villages a fire altar is prepared in the forecourt of the houses. Milk is boiled in a new pot with rice and jaggery (Brown sugar). The boiled rice (Pudding) is served to the deity especially the Sun God along with fruits and flowers. The cooked rice is eaten as the climax of the festival after the prayers.



Traditionally the second day is called cattle (Maattu pongal). The cow is worshipped and boiled rice is fed to the cow. The villages may include several festive games in celebration.



**Maha Sivarathiri:**

Eve of each new moon is a special night for Lord Siva; but the full moon night in the month of Masi (Feb/Mar) is known as Maha Siva Rathiri (Meaning Great Shiva Night). Devotees spend the whole night awake chanting/reading the praise of Lord Siva and concludes the penance after the sunrise. Legend has that Lord Siva performs the cosmic dance of creation, preservation and destruction on this night.



**New Year day:**

There are several New Year celebrations throughout India at various times. The first day of the Chithirai month (Usually) April 14th is the Tamil New Year. The families celebrate by wearing new clothes after an early bath, followed by prayers preferably in temple and having feast with sweets to welcome the New Year. Auspicious times are set to start new tasks and to handle money after the New Year.




**Rama Navmi** celebrates the birth of Rama. It falls in the month of Chithirai Navami Thithi. Fast, prayers and festive celebrations are conducted throughout the day.



**Varalaxmy viratham:**
Falls on the last Friday before the Powrnami (full moon) in the month of Avani (August). Ladies both married and unmarried worship varalaxmi amman, to achieve a prosperous family life. Once started it should be continued annually. Amman is placed facing East, and the devotee should sit by the right side of the idol/picture. A thread is used in the puja. Nine knots are placed in the thread. A flower is tied to the middle. Once puja starts one should not get up.



**Ganesha Chathurthi:**
Celebrates the birth of Lord Ganesha, in the month of Avani (Aug/Sept) chathurthi thithi. Each family worships Lord by fast, prayers and feast.



**Janamasthami:**
Celebrates the birth of Krishna. It falls in the month of Avani (Aug/Sept) Ashtami thithi. Krishna is said to have been born at Midnight, Hence some devotees stay up till that time to greet and chant with joy. It is of great celebrations at Mathura and Vrindavan, where pilgrims join the nightlong prayers and celebrations.



**Diwali:**
Is perhaps the most popular Hindu festival common in almost all states in India. It means 'garland of light'. Celebrated with regional variation, this stretches from 1 to 5 days. This day

celebrates the killing of Bali by Vishnu's Vamana Avatar, return of Rama and Sita from exile, and the demise of evil Asura Naragasuran by Lord Vishnu. On this day people light lots of lamps, visit relations, have feasts and firework displays. The families celebrate by wearing new clothes after an early bath, followed by prayers and having feast with sweets.



**Kethara Gowri Viratham:**

Is the fast observed in celebration of the union of Siva and Parvathi. Legend has it that Parvathi observed this fast to please Lord Siva. Lord Siva gave left half of his body to Parvathi and became Arthanareeswarar as a reward. It starts on the Shukla paksha Thasami thithi in Purattasi month and ends on the Amavasai at Diwali, after 21 days. A thread with 21 strings placed in puja daily. A knot is placed each day. On the final (Diwali day) the thread is worn like bangle during the puja and the fast is concluded.




**Skanda Shashti:**


Six day festival/fast, observed during Aippasi (Oct/Nov) is of special significance to Lord Karthikeya (Murugan). The festival, which takes place especially in Murugan temples, is a re-enactment of the Murugan's mythical six-day battle to kill Surapathman culminating in Thiruk kalyanam (marriage to Theivayanai). Devotees fast over the six days with one meal, breaking the fast on the seventh day. It is believed that, if a devotee starts to fast, he or she must continue for at least six years consecutively. Every day is spent to singing/listening to hymns in praise of Lord Murugan. The hymns recited are Skanda Shashti Kavasam, Kanthar Anupoothi, Kantharalangaram etc.




**Navarathri:**

Celebrates the worship of Mother Goddess and her victory over evil. It is celebrated in the month of Puratathi (Sep/Oct) over nine nights and the last day leading to Thasami thithi (Vijaya Thasami). It is celebrated all over India with varying themes. It is believed that Durga

armed with special weapons riding on the lion killed the demon Mahishasuran. On the tenth day, in temples a Banana tree is slained in the re-enaction of the demise of Mahishasuran. Over the nine days Goddess is worshipped in her forms as Durga, Lakshmi, and Saraswathi. Though Goddess is one, she is represented as three, standing for courage, wealth, and knowledge.




First three nights of the nine nights are devoted to Durga to invoke the divine power within us to defeat and distroy the animalistic tendencies. The next three days are spent in worshipping Laksmi for wealth (not material but the wealth of virtues). The final three nights, are spent praying to Saraswathi to grant one the ultimate knowledge. Books are placed in front of the deity on the first day of Sarasvathi puja and on the ninth day after the puja the books are taken out and read to invoke the goddess to grant sufficient knowledge in life. Children have their Vidhyarambam (Starting of learning) ceremony, on the Vijaya thasami day at the temple, where priests teach the first alphabet to start the child's education.





# Thirukural stories
# திருக்குறட் கதைகள்

திருமதி சாவித்திரி ஆனந்தன்
Mrs Savithiri Anandan

## பெரியாரைத் துணைக்கோடல்
## Seeking guidance from the worthy

அதிகாரம் /Chapter 45 குறள் /Kural 450

(It is wise to take the advice and guidance of the elders, knowledgable, capable and well mannered)

**பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்**

பெரியோருடைய நட்பினைத் தவிர்த்தல் பலரோடு பகை கொள்வதால் வரும் துன்பத்தை விடப் பத்துமடங்கு தீங்குடையது.

It is tenfold more injurious to abandon the friendship of the good, than to incur the hatred of the many.

மகாபாரதத்தில் போர் தவிர்க்கமுடியாததாகிவிட்ட நிலையில், கிருஷ்ணன் பாண்டவர் சார்பில் துரியோத னனிடம் தூது செல்கிறார். திருதராஷ்டிரன் உள்ளிட்ட கௌரவர்கள் அவரை வரவேற்கத் தயாராகினர்.

கிருஷ்ணன் சாதாரணமானவரா? அவரை வரவேற்பதற்கு நீ, நான் என்று போட்டி போடுகிறார்கள். எங்கே தங்கப்போகிறார் என்ற கேள்வி அனைவரிடமும் எழ, "நான் தூதுவனாக வந்திருக்கிறேன். எனது பணியில் நான் வெற்றியடைந்தால் மட்டுமே உங்களுடைய அழைப்பை ஏற்க முடியும். இன்றிரவு நான் விதுரனுடன் அவரது வீட்டிலேயே தங்கவுள்ளேன்" என்று கிருஷ்ணர் தீர்மானமாகக் கூறிவிட்டார். தனது நேசத்துக்குரிய கிருஷ்ணன் தன்னுடன் தங்குவதில் விதுரனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அந்த இரவுப் பொழுது விதுரனுக்கும் கிருஷ்ணனுக்கும் மகிழ்ச்சியாகக் கழிந்தது.

மறுநாள், கௌரவர்களுடைய அரசவையில் பாண்டவர்களின் தூதுவனாகக் கிருஷ்ணன் போரைத் தவிர்க்கும்படி பல நியாயங்களை எடுத்துச் சொல்லித் துரியோதனனுக்குப் புத்திமதி சொன்னார். ஆனால் அவனோ, "ஓர் ஊசிகுத்தும் அளவு நிலங்கூட நான் பாண்டவர்களுக்குக் கொடுக்கமாட்டேன்" என்று பிடிவாதமாய் மறுத்ததுடன் கிருஷ்ணனைப் பலவாறு அவமதித்தும் பேசினான். முடிவில் கிருஷ்ணர், "போர்தான் என்பது முடிவாகிவிட்டது" என்று கூறி அங்கிருந்து சென்றுவிட்டார்.

அதன்பிறகு, அவையிலிருந்த அனைவரும் கிருஷ்ணன் கூறிய வண்ணம் போரைத் தவிர்க்கும்படி துரியோதனனிடம் கேட்டுக்கொண்டனர். அப்படிக் கேட்டுக்கொண்டவர்களில் விதுரனின் குரல் ஓங்கி ஒலித்தது.

எதையும் கேட்கும் நிலையில் துரியோதனன் இல்லை. சுயமாகவே விதுரனை அவனுக்குப் பிடிக்காது. விதுரன் பாண்டவருக்குச் சார்பாக நடப்பதாகக் கற்பனை பண்ணுவான். அத்துடன் முன்தினம் இரவு கிருஷ்ணனை விதுரன் தன் வீட்டில் விருந்தாளியாகத் தங்கவைத்ததும் துரியோதனனது கோபத்தை உச்ச நிலைக்குக் கொண்டுபோய் விட்டிருந்தது. அதனால் தகாத வார்த்தைகளால் அவன் விதுரனைத் திட்டனான். அவற்றின் உச்சக் கட்டமாய், விதுரனின் பிறப்பை இழிவுபடுத்தினான். இவ்வாறு அவமானப்படுத்தியதால் விதுரன் மிகுந்த ஆத்திரம் அடைந்தான்.

"இந்த அரண்மனைக்கும் எனக்கும் இனி எதுவித சம்பந்தமும் இல்லை. என்னை அவமானப்படுத்திய துரியோதனனுக்காக இனி என்றைக்கும் எனது வில்லை ஏந்திப் போரிட மாட்டேன்" என்று சினம் பொங்கக் கூறித் தன் வில்லை இரண்டாக உடைத்தெறிந்துவிட்டு விதுரன் வெளியேறினார்.

எவரையும் வெல்லக்கூடிய வில்லாற்றல் கொண்ட விதுரன் என்ற சான்றோனைக் கௌரவ சேனை இழந்தது. முடிவில் பாரதப் பெரும் போரில் வெற்றி பாண்டவருக்கே கிட்டியது.

When a situation arose, that the possibility of the Grukshetra war became very strong, Krishna decided to go and meet Dhuriyodhana as an envoy of Pandavas with a view to avoid the war. The Gouravas, including the king Thirudarashdiran, got ready to receive Krishna and welcome him with honour.
Everyone was preparing to provide accommodation for Krishna while he was in Asthnapuram, because he was powerful. The question in everyone's mind was, "Where is he going to stay?"
"I have come here as an ambassador of Pandavas. Therefore, I have to be neutral. Once I achieve the purpose of my visit, then only will I accept all your invitations. Until then, I will stay with Vithuran" was Krishna's answer for their question. Hearing this, Vithuran was overwhelmed and overjoyed. He dutifully invited Krishna to his house and gave Krishna all the respect and hospitality. Both of them had a chat and enjoyed the company of each other.
The next day Krishna went to the Gourava's palace as Pandava's envoy. He suggested to Dhuriyodhana to prevent the war and gave him many reasons and rationale to support his suggestion. Dhuriyodhana was not in a mood to listen to Krishna as he had already made up his mind. "I will not yield even an inch of land to Pandavas", said Dhuriyodhana and he went on to insult Krishana.
Krishna decided that there was no point in continuing the talks and declared that there would be a war and returned to Pandavas. All the attendees of that meeting with Krishna advised Dhuriyodhana to avoid the war and follow Krishna's suggestions. Vithuran was the strongest of the lot and tried his best to convince Dhuriyodhana. Dhuryodhana always had a suspicion that Vithuran was on Pandava's side and never supported him. Beside that, he also knew that Krishna was staying with Vithuran the previous night. These factors made Dhuriyodhana very angry. He insulted Vithuran's mother and branded Vithuran as an illegitimate child. This provoked the usually calm Vithuran and he got very angry.

"From this moment, I sever all my loyalty to this palace. I will not fight in the forthcoming war supporting the Gouravas" said Vithuran, he then broke his bow into pieces and left the palace.

The bad behaviour of Dhuriyodhana made him lose the support of a very good warrior - Vithuran. As we all know, the war ended with victory to the Pandavas.


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர நகைச்சீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை



இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு.